
யுனெஸ்கோ

உலகைக் காட்டும் ஜன்னல்

# கூரியர்

பிப்ரவரி 1968. ஆண்டுச் சந்தா ரூ. 10.50. தனிப்பிரதி ரூ. 1.




## 1968

மனித உரிமைகளுக்கான
சர்வ தேச ஆண்டு

## உலகக் கலைக் கருவூலங்கள்

22



© Archives Robert Laffont

## கிரீட்டின் இளம் மன்னர்

3500 ஆண்டுகளான இந்த சுவர் ஓவியத்தில் கிரீட் நாட்டின் மதத் தலைவரும் மன்னருமான இளைஞரைக் காண்கிறோம். மலர்க் கிரீடமும் மணியாரமும் தரித்து அவர் மினோவன் நாகரிகத்தில் புனிதமாகக் கருதப்பட்ட 'லில்லி' மலர்த் தோட்டத்தில் நடக்கிறார். கி. மு. 1400ல் நிலநடுக்கம் போன்ற ஒரு விபத்தில் அழிந்து போன நோஸஸ் என்ற இடத்தின் இடிபாடுகளிலிருந்து கிடைத்தது இந்த ஓவியம். கிறிஸ்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே கிரீட் ஓவியர்கள் அருமையான சித்திரங்களைத் தீட்டினர். மினோவன் இல்லங்களில் தரைகளும், சுவர்களும் வர்ணம் தீட்டப்பட்டே இருக்கும்.

உலகைக் காட்டும் ஜன்னல்

# கூரியர்

பிப்ரவரி 1968

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினல் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினல் பதினேரு பதிப்புகளாக வெளியிடப்படுகிறது**

ஆங்கிலம்
ஃபிரெஞ்சு
ஸ்பானிஷ்
ரஷ்யன்
ஜெர்மன்
அராபிக்
அமெரிக்க ஐக்கிய நாடு
ஜப்பானிஸ்
இத்தாலியன்
ஹிந்தி
தமிழ்

விற்பனை, வினியோக அலுவலகம் :
441, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரு. *10.50*

**யுனெஸ்கோ கூரியர்,** அக்டோபர்—நவம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. அக்டோபர் நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) காப்பிரைட் அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் **யுனெஸ்கோ கூரியரிலிருந்து** எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு பிரசுரித்துக் கொள்ளலாம். அவ்வாறு பிரசுரித்த இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். காப்பிரைட் அல்லாத போட்டோக்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது **யுனெஸ்கோ கூரியர்** ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம் :
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினய்
பாரிஸ்-7, ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர் :
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர் :
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள் :
ஆங்கிலப் பதிப்பு : ரொனல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு : ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு : அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு : விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு : ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு : அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு : ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்யோ)
இதாலியப் பதிப்பு : மரியா ரெமிட்டி (ரோம்)
இந்திப் பதிப்பு : ஏ. சந்திரஹாஸ் (டில்லி)
தமிழ் பதிப்பு : எஸ். கோவிந்தராஜுலு (மதராஸ்)
ஆராய்ச்சி : ஓல்கா ரோடல்
அமைப்பு, சித்திரம் : ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

**இதழ் 8.**

1968
மனித உரிமைகளுக்
கான சர்வதேச ஆண்டு

பக்கம்

4 மனித உரிமைச் சாசனம் எப்படிப் பிறந்தது?
—ரெனி காஸின்

7 மனித உரிமைகள் பற்றி 30 கேள்விகள்

14 யுனெஸ்கோவும் மனித உரிமைகளும்

15 கற்றவர்கள்தான் சுதந்திரமாக இருக்கிறர்கள்
—லூயி பிராங்காய்ஸ்

17 அறிவுக்கு உரைகல்

22 எங்கும் நிறைந்துள்ள இன வெறியின் நிழல்


26 சர்வ தேசச் சட்டத்தின் புதிய எல்லைகள்
—ஸீன் மாக்பிரையட்

33 யுனெஸ்கோ செய்தியறையிலிருந்து

34 தமிழில் வெளி வந்துள்ள இராமாயண, மகாபாரதப் பதிப்புகள்

2 உலகக் கலைக் கருவூலங்கள் (22)
கிரீட்டின் இளம் மன்னர்.

Photo © Tiofoto-Lennart Olson



No 1-1968 MC 67-1-231 A

**அட்டைப் படம்**

சான் பிரான்சிஸ்கோவில் 1945-ல் ஐ. நா. சாஸனம் வகுக்கப்பட்டபோது அதன் மூலவர்கள் முகவுரையின் முதல் பாராவிலேயே அடிப்படை லட்சியத்தையும் கூறியுள்ளனர்: வரும் தலைமுறையினரைப் போர்க் கொடுமையிலிருந்து காப்பது. அடுத்த பாராவில் அடிப்படை மனித உரிமைகளிலும் மதிப்பிலும் உள்ள நம்பிக்கையை உறுதிப் படுத்தியிருந்தார்கள். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் எல்லா நாடுகளுக்குமாக மனித உரிமைப் பிரகடனத்தைச் செய்யும் பொறுப்பை ஐ. நா. தன் முதல் கடமைகளில் ஒன்றுக மேற்கொண்டது.

### உரிமைச் சாசனத்தின் முதல் நகலை தயாரித்தவர் கூறுகிறார்

# மனித உரிமைச் சாசனம் எப்படிப் பிறந்தது?

**இருபதாண்டுகளுக்கு முன்பு 1948 டிசம்பர் 10ந் தேதி ஐ. நா. பொதுச்சபை மனித உரிமைப் பிரகடனம் செய்தது. இதன் நினைவாக 1968ம் ஆண்டு முழுவதையும் சர்வதேச மனித உரிமைகள் ஆண்டாகக் கொண்டாடும்படி கூறியுள்ளது.**

**இந்த இதழில் பிரகடனம் வகுக்க வழி செய்த நிகழ்ச்சிகளும் கடந்த 20 ஆண்டுகளில் இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளும் ஆராயப்பட்டுள்ளன. 1948க்குப் பிறகு எவ்வளவோ வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளபோதிலும் உலகின் எந்த ஒரு நாடும் பிரகடனத்திலுள்ள உரிமைகளைப் பூரணமாக இன்னும் அளிக்கவில்லை.**

**இக்கட்டுரையில் ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன் முன்னாள் தலைவரான பேராசிரியர் ரெனி காஸின் சாஸனம் எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்பதை நினைவு கூறுகிறார்.**

## ரெனி காஸின்

இனவெறியும் மதவெறியும் பிடித்த அடால்ப் ஹிட்லர், தனது ஈவு இரக்கமற்ற தாக்குதலைத் தொடுத்தான். ஜெர்மனியிலும், மற்ற நாடுகளிலும் உள்ள மனித உரிமைகளுக்கு எதிராகவும், 1789-ல் பிரகடனப் படுத்தப் பட்ட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளுக்கு எதிராகவும் அவனுடைய தாக்குதல் அமைந்தது. இதை ஆட்சேபித்துப் பலர் கோபக்குரல் எழுப்பினார்கள். அவனுடைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் உலகத்தை ஒரு புதிய சர்வதேச யுத்தத்தில் ஈடுபடுத்தியது. விடுதலைக்காகவும், அடிப்படை உரிமைகளுக்காகவும் நடைபெறும் ஒரு புனிதப் போராட்டமாகப் பலர் அதைக் கருதினர். யுத்தம் முடியுமென்பே அமைக்கப் படுவதாக இருந்த ஒரு புதிய உலக அமைப்பின் அடிப்படை நோக்கங்களில் சமாதானத்துடன், மனித உரிமைகள் மதித்துக் காப்பாற்றப்படவேண்டும்; இதன் மூலம் பழைய சர்வதேச சங்கத்தின் பலஹீனமான உறுதிமொழி ஒப்பந்தம் அகற்றப்படவேண்டும் என்று அவர்கள் சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தைத் தயாரிக்க 1945-ல் கூட்டப்பட்ட சான் பிரான்சிஸ்கோ மாநாடு, இந்தக் கருத்தை ஏகமனதாக அங்கீகரித்தது.

ஹிட்லரின் யுத்தக் கைதிகள் முகாம்களில் நடந்த சித்திரவதைகள் கண்டுபிடிக்கப்பட்டதும், மக்கள் கொதித்தெழுந்தனர். யுத்தத்திற்குக் காரணமானவர்களையும், மனித உரிமைகளுக்கு எதிராக நடந்து கொண்டவர்களையும், விசாரணை செய்து, தண்டிக்க வேண்டுமென்றும், மனித உரிமைகளுக்கான ஒரு சர்வதேசச் சட்டத்தை இயற்ற சபதம் ஏற்கும்படியும் பொதுமக்களின் அபிப்பிராயம் திரண்டெழுந்து அரசாங்கங்களை வற்புறுத்தியது. இதை மனத்திற்கொண்டு, ஐ. நா. சாசனத்தின் 68-ம் பிரிவில் குறிப்பிட்டபடி, மனித உரிமைகளுக்கான ஐ. நா. கமிஷனில் ஒரு விசேஷக் குழு 1946-ல் நிறுவப் பட்டது. மனித உரிமைகளை அமுலாக்க முயல்வதுதான் அந்தக் குழுவின் கடமையாகும். அதற்கு ஆரம்ப அடிப்படையாக, ஐ.நா பொதுச் சபையில் சமர்ப்பிக்க, மனித் உரிமைகளுக்கான ஒரு நகல் சாசனத்தைத் தயாரிக்கும்படி அந்தக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

1946-ல் நிலவிய இந்தச் சூழ்நிலையில், ஐ. நா. உதவிப் பொதுச் செயலாளர் திரு. ஹென்ரி லாகிர் தலைமையில் மனித உரிமைகளுக்கான ஒரு விசேஷக் குழு நிறுவப்பட்டது. பொதுநல சங்கங்க்ள், அரசாங்க சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் கருத்துக்களையும், சிபாரிசுகளையும் இந்தப் பிரிவு முதலில் கேட்டு அறிந்தது. அதன்பிறகு, காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியார், திருமதி எலியனார் ரூஸ்வெல்ட் தலைமையின் கீழ் கூடி, இரண்டு நகல் திட்டங்களை ஒரே சமயத்தில் தயாரிக்க முடிவெடுத்தது. ஒன்று, அனேக நாடுகளில் பல அறிஞர்களால் அமுலாக்கப் படுவதை அடிப்படையாகக்கொண்டு மனித உரிமைகளுக்கான ஒரு சர்வதேச சாசன்த்தைத் தயாரிப்பது. மற்றொன்று, மனித உரிமைகளைப்பற்றித் திட்டவட்டமாகவும், உறுதியாகவும், சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் உள்ள ஒரு சர்வதேச உறுதிமொழி ஒப்பந்தத்தைத் தயாரிப்பது.

மனித உரிமைகளுக்கான கமிஷனின் இரண்டாவது மகாசபைக் கூட்டம் 3-6-1947-ல் ஜினிவாவில் கூடியது. அதில், மனித உரிமைகளுக்கான சாசனத்தை மூன்று பிரிவுகளாகத் தயாரிப்பதென முடிவு செய்தனர். ஒரு மத்தியப் பிரகடனம்; சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும் ஒரு உறுதிமொழி ஒப்பந்தம்; அவற்றை அமுலாக்கும் முறைகள். அதாவது, சர்வதேச விமரிசனங்கள் செய்வதன் மூலம், எல்லா நாடுகளையும், அவர்கள் ஒப்புக்கொண்ட உறுதி மொர்ழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமுல்படுத்தச் செய்வது.

1948 வசந்தத்தின்போது கூடிய, மனித உரிமைகளுக்கான மூன்றாவது மகாசபைக் கூட்டத்தில்தான் உண்மையிலேயே ஒரு முடிவும் ஏற்பட்டது. நகல் பிரகடனத்தின் முன்னுரையும், முடிவான விதிகளும் நிறைவேற்றப்பட்டன. இதில், பெண்களின் நிலைபற்றி ஐ. நா. கமிஷன் தெரிவித்துள்ள கருத்துக்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டது. இரண்டு விதமான உரிமைகளை அமுலாக்குவதில் சமத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஐ. நா. கமிஷன் முடிவு செய்ததுதான் இதில் முக்கியம் வாய்ந்ததாகும். இருவித உரிமைகள் என்பதில், ஜீவாதார, அரசியல் உரிமைகள் (''விருப்பமான உரிமைகள்'' என்றழைக்கப்படுவது) ஒன்று. பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் (அல்லது'' தேவையான உரிமைகள்'') மற்றொன்று. சர்வதேசக் கூட்டுறவுடன் அந்தந்த நாட்டின் வசதிகளையும் அமைப்புகளையும் பொறுத்தே, இந்த உரிமைகள் அமுலாக்கப்பட வேண்டும் என்று (22-ம் பிரிவில்) ஒரு விதியில் கூறப்பட்டுள்ளது.

நகல் பிரகடனம் தயாராகி முடிந்தது. அதை உடனே பொதுச் சபையில் தாக்கல் செய்வதா, அல்லது உறுதி மொழி ஒப்பந்தம் தயாராகி முடியும் வரை காத்

---

**ரெனி காஸின்** மனித உரிமைகளுக்காகப் போராடியவர்களில் முக்கியமான ஒருவர். சாஸனத்தின் முதல் நகலைத் தயாரித்தவர். உலக நாடுகள் சபையிலும் (1924-38) ஐ. நா. விலும் (1946-58) பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதியாக இருந்தவர். யுனெஸ்கோ அமைப்புக்கு வழி கோலிய ஆயத்தக் கூட்டத்திலும் பங்கு கொண்டவர். ஸ்ட்ராஸ்பர்க்கிலுள்ள மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய மன்றத்தின் தலைவராக இருக்கிறார். பல நூல்களை எழுதியுள்ளார்

உறுப்பு நாடுகள் ஐ. நா. வின் ஒத்துழைப்புடன் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் மதித்துப் போற்றவும் அடையவும் உறுதி கொள்கின்றன.

—பிரகடனத்தின் முகவுரை.




Photo United Nations

திருப்பதா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொருளாதார, சமூகக் கவுன்சிலுக்கு ஏற்பட்டது. அந்த நேரத்தில் சர்வதேசச் சூழ்நிலையில் மிகவும் சாதகமான போக்குக் காணப்பட்டது. அதைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், பிறகு இந்தப் பிரகடனமோ அல்லது உறுதிமொழி ஒப்பந்தமோ எப்போதுமே நிறைவேற்றப்பட முடியாது என்பதை, மிகப் பெரும்பான்மையினருடன், முன் முயற்சி எடுத்துக் கொண்ட அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் லார்டு அட்லியும் உணர்ந்தார். அதன்படி 1948-ல் நடைபெற்ற பொதுச் சபையின் வழக்கமான கூட்டத்தொடருக்கு, நகல் பிரகடனத்தை பொருளாதார சமூகக் கவுன்சில் விவாதிக்காமலேயே அனுப்பி வைத்தது.

பாரிஸ் நகரில் செய்லட் அரண்மனையில், பிரஞ்சுக் குடியரசின் ஜனாதிபதி திரு. எம். வின்சென்ட் ஆரியோல் முன்னிலையில் பொதுச்சபை ஆரம்பமாகியது. சமூக, மனிதாபிமான, கலாசாரக் கமிஷனுக்கு (மூன்றாவது குழு) நகல் பிரகடனத்தை ஆராயும்படி சபை அனுப்பி வைத்தது. சட்டக் கமிஷன் (ஆறாவது குழு) உறுதிமொழி ஒப்பந்த நகலை விவாதத்துக்கு எடுத்துக் கொண்டு இனவெறிக் குற்றத்தை தடுப்பது பற்றியும், குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுப்பது பற்றியும் விவாதித்தது.

இந்த விவாதங்களில், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா உட்பட எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் பங்கெடுத்துக் கொண்டனர். லெபனான் பிரதிநிதி திரு. சார்லஸ் மாலிக் தலைமையில் நடைபெற்ற பொதுச்சபையின் 87 மகாசபைக் கமிஷன் கூட்டங்களில் விவாதம் தொடர்ந்தது. விசேஷக் குழுவின் பத்துக் கூட்டங்களில் விவாதம் நீடித்தது.

சீனக் குடியரசின் பிரதிநிதி திரு. பென்-சுன்-சாங் அவர்களால் ஆமோதிக்கப்பட்ட ஆரம்ப நகலின் பொது அமைப்பு அங்கீகரிக்கப்பட்டது. அதே மாதிரி, மனித உரிமைகளின் கமிஷனால் தீர்மானிக்கப்பட்ட இருவித உரிமைகளும் (22-ம் பிரிவு) சமமாக அங்கீகரிக்கப்பட்டன. முகவுரை, முன்னுரையுடன் 30 பிரிவுகளைக் கொண்டதாகப் பிரகடனம் சுருக்கப்பட்டது. எல்லா விதமான பாரபட்சங்களையும் கண்டனம் செய்யும் (பிரிவு-2) விதியும், சட்ட பூர்வமான அமைப்பின் மூலம் சரியான பரிகாரம் காண, ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமை (பிரிவு-8) பற்றியும், தஞ்சம் பெற உரிமை (பிரிவு-14) பற்றியும், தேசப் பிரஜையாகும் உரிமை (பிரிவு-15) பற்றியும், விவாகம் செய்து கொள்ளும் உரிமை, கணவன் மனைவியாகும் உரிமை, குடும்பம் ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை (பிரிவு-16) ஆகியவை பற்றியும், பொது வாழ்வில் பங்குபெறும் உரிமை (பிரிவு-21) பற்றியும் சிறந்த முடிவெடுக்கப்பட்டன.

1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம்நாள் நள்ளிரவில் இந்த உலகப் பிரகடனம் பொதுச் சபையில் நிறைவேறியது. 48 வாக்குகள் சாதகமாகக் கிடைத்தன. 8 பேர் நடுநிலை வகித்தனர். ஆனால் ஒருவர் கூட அதை எதிர்த்து வாக்களிக்க வில்லை. பிரகடனம் நிறைவேறியதும் பிரதிநிதிகள் மேடைக்குச் சென்று சொற்பொழிவாற்றினர். உறுதிமொழி ஒப்பந்தத்தைப் போல் பிரகடனம் தேசங்களைக் கட்டுப்படுத்தாது என்று எந்த பிரதிநிதியுமே கூறவில்லை. நடுநிலை வகித்த எட்டுப் பிரதிநிதிகளில் அறுவர் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பொதுவுடமை நாட்டினராகும். அவர்கள் கூறியதெல்லாம் இந்தப் பிரக்டனம் ''போதுமானதல்ல'' என்பதுதான். ஆஸ்திரேலியப் பிரதிநிதியும், பொதுச் சபைத் தலைவருமான திரு. ஹெர்பர்ட் இவாட் கீழ்வருமாறு கூறினார்:

# பிரகடனத்துக்கு வலுவூட்ட இரு பெரும் உடன்பாடுகள்

''எல்லா தேசங்களும் ஒன்றுபட்டு, மனித உரிமைகளுக்கும், அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் பிரகடனம் வெளியிட்ட முதல் நிகழ்ச்சியாகும் இது! ஐ. நா. வின் முழு ஒப்புதலையும் அதிகார பூர்வமாகப் பெற்றது இந்தப் பிரகடனம். உலகில் உள்ள கோடிக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் இந்தப் பிரகடனத்தின் மூலம் உதவியும், வழிகாட்டுதலும் உத்வேகமும் பெறுவார்கள்!''

பிரகடனம் உலக வியாபகமாக விளங்கும் என்பதற்கு, அதன் பரந்த நோக்கும், அதன் உள்ளடக்கமும் தான் முக்கிய அம்சங்கள் என்பது என் கருத்து. மனிதத் தன்மை வளர்ச்சியடையவும், அது மரியாதை செய்யப்படவும் தேவையான உரிமைகளையும் சுதந்திரங்களையும் இந்தப் பிரகடனம் அங்கீகரிக்கிறது. உயிர் வாழ உரிமை, இயற்கையான சுதந்திரம், நீதியில் சுதந்திரம், ஆன்மீக சுதந்திரம், அரசியல் சுதந்திரம், இன்னும் மனச்சாட்சி, எண்ணம், அதை வெளியிடும் உரிமை ஆகியவற்றுக்குச் சுதந்திரம்; வேலை செய்ய, சொத்து வைத்துக்கொள்ள, படிக்க, ஓய்வெடுக்க, கலையின் பயன்களைப் பெற உரிமைகள்; அறிஞர்கள், கலைஞர்களின் படைப்புகளை உருவாக்க உரிமைகள் இவற்றுக்கெல்லாம் உத்தரவாதமளிக்கிறது இந்தப் பிரகடனம்!

ஆரம்பத்தில், தேசங்கள் தங்கள் நாட்டுக்கும் மக்களுக்குமான நலன்களைக் கருதி, ஒரு சர்வதேசப் பிரகடனத்தை உருவாக்க எண்ணியிருந்தன. ஆனால் உலகப் பிரகடனம், தன் ஆட்களுடன் மனிதன் கொண்டுள்ள உறவை நேரடியாகக் கண்காணிப்பதை அதிகரிக்கச்செய்கிறது. பரந்த அளவில் உள்ள சமுதாய அமைப்புகளின் குடும்பம், மதம், உத்தியோகம், தொழில், நகரம், நாடு, சமூகம் ஆகியவற்றின் மீதும் நேரடிக் கவனம் செலுத்த வழி செய்கிறது. ஒரு மனிதனின் குடும்பத்திலுள்ள அத்தனை நபர்களும் சர்வதேச சட்டத்திற்கு உடந்தையாக இருப்பதன் மூலம், இந்தப் பிரகடனத்திற்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்களாகிறார்கள். அவர்களின் பூர்வீக நிலை பற்றியோ, தற்போதைய நிலை பற்றியோ, அவர்களின் இனம், பால், மதம், மொழி, பிறப்பு, வாய்ப்பு, சமூகநிலை, அல்லது எண்ணம் ஆகியவை பற்றிப் பிரகடனத்திற்குப் பேதம் கிடையாது. உலகின் எல்லா நாடுகளுக்கும், பிரதேசங்களுக்கும் இந்தப் பிரகடனம் பொருந்தும். அந்த நாடுகள் அரசியல் ரீதியிலோ, நிர்வாக அமைப்பிலோ, பொருளாதாரத்திலோ, அல்லது சர்வதேச அந்தஸ்திலோ மாறுபட்டிருந்தாலும், ஐ. நா. சபையில் அவை உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த உலகப் பிரகடனம் அவற்றிற்குப் பொருந்தும்.

சுருங்கக் கூறின், இந்தப் பிரகடனம் ஆக்க பூர்வமான ஒரு பரந்த நடவடிக்கைக்கு லட்சிய சாதனையாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

ஆனால் அந்த லட்சியத்தை இன்னும் நாம் அடையவில்லை என்பது, இன்றைய வாழ்க்கையின் உண்மை நிலையை நோக்கினால் புலனாகும்.! மிகவும் முன்னேற்ற மடைந்த எந்த நாடும் அந்தப் பிரகடனத்தின்படி நடந்து கொண்டதாகப் பெருமை கொள்ள முடியாது. எந்தக் கொள்கைகளுக்காகப் போர் நடைபெற்றதோ அந்த நினைவுகளும் மங்கி மறைந்து விட்டன. விடுதலைக்காகப் போராடிய புதிய நாடுகளும் அந்தக் கொள்கைகளை மறந்துவிட்டன. மனித உரிமைகளுக்குப் போதிய மதிப்பளிக்காமலேயே, தேசங்கள் தங்களுடைய உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் ஈடுபட்டுள்ளன. உயிர் வாழ்வதற்குரிய உரிமையை மீறி, கொலையும், கொடுங்கோன்மையும் நடத்துபவர்கள் தண்டிக்கப்படாமல் விடப்படுகிறார்கள். பெண்களின் அடிமை வாழ்வு, பசி, பட்டினி, சரியான கல்வி இன்மை; மனச்சாட்சி, எண்ணம், பேச்சு ஆகியவற்றுக்குச் சுதந்திரம் இல்லாமை; பரந்த அளவில் நிலவும் நிறவெறி, இனவெறி, கொடும் அரசாங்கம் ஆகியவையும், இன்னும் இதுபோன்ற பல அக்கிரமங்களும் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருவதை மறுக்கவே முடியாது.

இருந்த போதிலும், இந்த அக்கிரமங்களை ஒடுக்குவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி உலகப் பிரகடனத்தின் முன்னுரையில், கடைசிப் பகுதிகள் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. இந்த நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமானது சரியான கல்வியும் போதனையும்தான். இவை சிறுவர்க்கு மட்டுமின்றி முதியோருக்கும் கூடத்தான்! இங்கேதான் யுனெஸ்கோ ஸ்தாபனம் தன்னுடைய கடமையை ஆற்ற முக்கிய பங்கேற்றிருக்கிறது.

இரு பெரிய உறுதிமொழி ஒப்பந்தங்களின் நகல்கள் முதலில் தயாரிக்கப்பெற்று, பிறகு அவற்றை விவாதித்து, அவற்றை நிறைவேற்றியதன் மூலம், மனித உரிமைகளுக்கான ஐ. நா. பிரகடனம் பூர்த்திபெற, மனித உரிமைகளின் கமிஷனுக்கு ஆறு ஆண்டுகளும் (1948 முதல் 1954), பொதுச் சபைக்கு அதற்கு மேல் பதின்மூன்று ஆண்டுகளும் (1954 முதல் 16-12-1966) பிடித்தன. இந்த உறுதிமொழி ஒப்பந்தங்கள் ஒவ்வொரு நாட்டையும் கட்டுப்படுத்துகின்றன. ஒப்பந்தங்களை மீறி எந்த ஒரு நாடும் நடப்பதாக வேறொரு நாடோ, தனி நபரோ குற்றம் சாட்டினால், அதற்கான நடவடிக்கை எடுக்கவும், எல்லா நாடுகளும் உறுதிமொழி ஒப்பந்தங்களின்படி நடந்து கொள்ளச் செய்யவும், சர்வதேச அமைப்பு ஒன்றை நிறுவ, பிரகடனத்தின் உறுதிமொழி ஒப்பந்தத்தில் வழி வகுக்கப் பட்டிருக்கிறது. (1)

ஒவ்வொரு நாட்டிலும் பொதுமக்களின் அப்பிராயத்தைத் திரட்டி, விரைவில் அமுலாக்கும்படி அந்தந்த அரசாங்கங்களை வற்புறுத்தினாலன்றி, அனேக நாடுகள் இந்த உறுதிமொழி ஒப்பந்தங்களை அமுல்படுத்த, நிச்சயம் நீண்ட காலம் பிடிக்கும் (ஒவ்வொரு நகல் திட்டங்களையும் இன்னும் 35 நாடுகள் அங்கீகரிக்கவேண்டும்). உலக அபிப்பிராயத்தை ஒன்று திரட்டி, எங்கும் அமுல் படுத்த இடை விடாத முயற்சியை மேற்கொள்ளவேண்டும். இல்லையேல் மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனம் ஒரு உண்மையான சக்தியாக விளங்க முடியாது.

எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் நம் முன் இருந்த போதிலும், வெற்றிக் கொடி நாட்டப் போகும் உலகப் பிரகடனத்தின் மீதுள்ள நம்பிக்கையை நாம் இழந்து விடக் கூடாது. கடந்த 20 ஆண்டுகளில் உலகப் பிரகடனம் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகப் பரிணமித்து விட்டது. அதன் மூலம் 60 நாடுகள் சுதந்திரம் பெற்று, ஐ. நா. விலும் உறுப்பினர்களாகிவிட்டன. பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானவர்களுக்கும், தவறான முறையில் நடத்தப்படுகிறவர்களுக்கும், மதத்தின் பெயராலும், மதத்தை எதிர்ப்பதன் பெயராலும் நடைபெறும் கொடுமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பதாகையாக பிரகடனம் விளங்குகிறது.

மனித ஒற்றுமையையும், தனி மனித கௌரவத்தையும் நிலைநாட்டுவதற்குத் தயாரிக்கப்பட்ட கோட்பாடுகள் அடங்கியவை இந்தப் பிரகடனம். அதனால் வரப்போகும் ஆண்டுகளில் அதன் செல்வாக்கு வளர்ந்து கொண்டே வரும். மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனம், ஐ. நா சாசனத்தையும் விட சிறிது அதிகபட்சமானது என்று சிலரால் கருதப்பட்டாலும், நமது காலத்தின் ஒழுக்க நியதிகளுக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். தேசீய அரசியல் சட்டங்களுக்கும், கட்டாய வளர்ச்சியும், மாறுதலும் பெற்றுவரும் சர்வதேசக் கழகங்களின் விதிகளுக்கும் இது ஒரு மணிமகுடமாக விளங்குகிறது.

உலகப் பிரகடனம் நிறைவேற்றப் பட்டது, உலக சரித்திரத்தில் ஒரு திரும்பு முனையாக அமைந்து விட்டது. மிருகத்தனமான கொடுமைகளால் நசுக்கப்படுவோரின் கூக்குரல்களையும், சிக்கல் மிகுந்த 'சிகப்புநாடா'வின் பெயரால் நசுக்கப்படுவோரின் துயரங்களையும் இனியும் நாம் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. இவற்றையெல்லாம் விட, மனிதனின் மனச்சாட்சி என்ற நீதிமன்றத்தில், எத்தனையோ முறையீடுகளால் அது சூழப்பட்டிருப்பதால், இந்த முறையீடுகளால் அது கேளாக்காதினராக இருந்து விடாமல் தடுக்க, தீவிரமான எதிர் நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

உலகப் பிரகடனம் நம் அனைவர் மீதும் பொறுப்பைச் சுமத்தியுள்ளது; நம்மில் ஒவ்வொருவர் மீதும் அது பொறுப்பைச் சுமத்தியுள்ளது!

---

(1) இங்கே ஆசிரியர், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய உறுதிமொழி ஒப்பந்தத்தையும், ஜீவாதார, அரசியல் உரிமைகள் பற்றிய உறுதிமொழி ஒப்பந்தத்தையும் குறிப்பிடுகிறார். இந்த இரு உறுதிமொழி ஒப்பந்தங்களையும் ஏற்ற அதே சமயத்தில், தனி நபர்களின் உரிமைகள் மீறப்படும் அளவுக்கு நாடுகள் சட்டமியற்றினால், அதைப் பற்றி அந்த நாட்டின் தனி நபர்கள் குற்றம் சாட்ட முடியும். ஜீவாதார அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தில், விருப்பமான உரிமைகள் பெரும் மூலாதார சாசனமாக இது விளங்குகிறது : —ஆசிரியர்.




# மனித உரிமைகள் பற்றி 30 கேள்விகள்

**1 மனித உரிமைகள் யாவை?**

கண்ணியமான, நாகரிக வாழ்வு வாழவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டவை மனித உரிமைகள். ஒவ்வொருவருக்கும் உள்ள கௌரவத்துக்கும் அது மதிப்பும் பாதுகாப்பும் அளிக்கும். விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் வழங்கக்கூடிய வசதிகளுக்கும் மேம்பட்டது இது. வெறும் உலகியல் தேவைகளைப் பற்றியது மட்டுமல்ல அது; ஆத்மிக தேவைகளையுடைய மனிதப் பண்பையும் அறிவையும் முழுவதுமாகப் பயன்படுத்த உதவுவது அது. மனித உரிமைகள் அடிப்படையானவை. அவையில்லாமல் நாம் மனிதர்களாக வாழ முடியாது.

மனிதர்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை மறுப்பது அரசியல், சமூகக் கிளர்ச்சிகளுக்கும் போர்களுக்கும் வழிவகுக்கும். நாடுகளுக்கிடையேயும், ஒரு நாட்டுக்குள்ளேயே பல பிரிவுகளுக்கிடையிலும் விரோதத்தை ஏற்படுத்தும். மனித உரிமைகள் என்பது தத்துவவாதிகள், வழக்கறிஞர்கள் சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு விஷயமல்ல; அது ஒவ்வொருவருடைய அன்றாட வாழ்வையும் பாதிக்கும் பிரச்னை.

பொதுவாகக் கூறுவதானால் உலக உரிமைப் பிரகடனத்தில் இரண்டு வித உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முதலாவது மரபு வழி வருவது—சிவில், அரசியல் உரிமைகள்,. ஜனநாயக சமூகம் உருவாகி வந்த நீண்ட கால கட்டத்தில் தோன்றியவை. அதன் பிறகு பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள். இவையில்லாமல் வெறும் அரசியல் உரிமைகள் மட்டும் இருந்தால் போதாது என்பதை மக்கள் அண்மைக் காலத்தில்தான் உணரத் தொடங்கினர்.

## 2 சிவில், அரசியல் உரிமைகள் யாவை?

முதலாவதாக நம்மனைவருக்கும் வாழ உரிமையும், சுதந்திரமும், பாதுகாப்பும் இருக்க வேண்டும். நாம் அடிமைப் பட்டிருக்கக் கூடாது; அல்லது மிருகத் தன மான முறையில் தண்டிக்கப்படக்கூடாது. சட்டத்துக்கு முன்பு நாமனைவரும் சமமாக இருக்கவேண்டும். யாரோ ஒருவருடைய விருப்பத்துக்கு இணங்க கைது செய்யப் படவோ, நாடுகடத்தப் படவோ கூடாது. யாரும் குற்றம் சாட்டினால் நியாயமான முறையில் விசாரித்துத் தீர்ப் பளிக்க வேண்டும்.

நமது தனிமை, குடும்பம், வீடு, கடிதப் போக்குவரத்து ஆகியவற்றில் யாரும் தலையிடாமல் பாதுகாப்பு இருக்க வேண்டும். கொடுமைப் படுத்தப் பட்டால் வேறொரு நாட் டிடம் தஞ்சமடைய வசதி இருக்கவேண்டும். ஒரு நாட்டுக் குடிமகனாக இருக்க உரிமை வேண்டும். மணந்து கொண்டு குடும்பம் நடத்தக் கூடியவர்களாக இருக்கவேண்டும். குடும் பத்துக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். உடைமைகளை வைத்திருக்க உரிமை வேண்டும்.

பிறகு அடிப்படை உரிமைகள் உள்ளன. சிந்திக்கவும் மனச்சாட்சிப்படி நடக்கவும், விரும்பிய மதத்தைப் பின் பற்றவும், கருத்துக்களை வெளியிடவும், பேசவும், அமைதி யான முறையில் பிறருடன் சேர்ந்து சங்கம் அமைக்கவும் உள்ள உரிமைகள். தேர்தல்கள் மூலம் சர்க்காரில் பதவி வகிக்கவும், தகுதிகள் மூலம் வேலை பெறவும் எல்லோர்க்கும் சம வாய்ப்பு இருக்கவேண்டும்.

## 3 பொருளாதார, சமூக உரிமைகள் யாவை?

வேலை செய்யும் உரிமை, விரும்பும் வேலையைத் தேர்ந் தெடுக்கும் உரிமை, வேலையில்லாத் திண்டாட்டத்துக்கெதி ரான பாதுகாப்பு ஆகியவையும் அடங்கியவை. ஆண், பெண் இருவருக்கும் ஒரேவிதமான வேலைக்கு ஒரே வித சம்பளம் இருக்க வேண்டும். ஓய்வெடுக்கும் உரிமை எல்லோர்க்கும் வேண்டும். போதுமான வாழ்க்கைத்தர மும் மற்றொரு உரிமையாகும். இதற்குப் போதிய உணவு, உடை, வீடு, வைத்திய வசதி, சமூகப் பாதுகாப்பு ஆகி யவை இருப்பதவசியம். தாய்மார்களுக்கும் குழந்தைகளுக் கும் விசேஷக் கவனிப்பும் உதவியும் அளிக்க வேண்டும். கல்வி பெறவும் சமுதாயக் கலாசார வாழ்வில் சுதந்திரமாகக் கலந்து கொள்ளவும் எல்லோர்க்கும் உரிமை வேண்டும்.

## 4 இவை நமது உரிமைகள் என்பது யார்?

நாகரிக வாழ்வு தொடங்கியது முதலே தத்துவ வாதி களும் உலக வரலாற்றின் மாபெரும் மனிதர்களும் மனித உரிமைகள் பற்றிய கருத்தை உருவாக்கி வற்புறுத்தி வந் திருக்கிறார்கள். ஐ. நா. சபை அதை ஊர்ஜிதம் செய் திருக்கிறது. ஐ. நா. பொதுச்சபையினால் 1948 டிசம்பர் 10ந்தேதி ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைப் பிர கடனத்தில் இங்கு குறிப்பிட்ட உரிமைகள் யாவும் அடங்கி யுள்ளன. ஒரு நாடு கூட இதை எதிர்க்கவில்லை.

எல்லா மக்களும், நாடுகளும் அடையக்கூடிய ஒரு பொதுவான தரம் இது; கட்டுப்படுத்தும் விதிகள் அல்ல என்று பிரகடனமே கூறுகிறது. வெவ்வேறு கலாசார, பொருளாதார, அரசியல் பின்னணி கொண்ட இவ்வளவு நாடுகள் இந்தப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதே அந்நாடுகள் இவ்வுரிமைகளை வழங்கத் தயாராயிருப்பதைப் புலப்படுத்துகிறது. பல நாடுகளின் அரசியலமைப்பில் இப் பிரகடனம் இணைக்கப்பட்டுள்ளது.

## 5 இந்த உரிமைகளை ஐ. நா. சபை ஏன் சட்டமாக்கக் கூடாது?

மனித உரிமைகள் பற்றிய இரு சர்வதேசக் கூட்டு ஒப்பந்தங்களை வகுத்ததின் மூலம் அதைத்தான் செய்திருக் கிறது. முதலாவது பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றியது. இரண்டாவது சிவில், அரசியல் உரிமைகள் பற்றியது. இரண்டும் ஐ. நா. பொதுச்சபை யினால் 1966 டிசம்பர் 16-ல் ஏற்கப்பட்டன. இந்தக் கூட்டு ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றும் 35 நாடுகள் அவற்றை அங்கீகரித்த பிறகு நடைமுறைக்கு வரும். சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய கூட்டு ஒப்பந்த முதற் குறிப்பை 10 நாடுகள் அங்கீகரிக்கவேண்டும் (கேள்வி 10 காண்க) 1967 நவம்பர் வரை இந்த மூன்றில் எதையும் ஒரு நாடு கூட செல்லுபடியாக்கவில்லை. ஆயினும் 19 நாடுகள் பொருளாதார, சமூக உரிமைக் கூட்டு ஒப்பந்தத்திலும் 18 நாடுகள் சிவில், அரசியல் உரிமைகள் கூட்டு ஒப்பந்தத் திலும் கையெழுத்திட்டுள்ளன. இவற்றுள் 8 முதற் குறிப்பிலும் கையெழுத்திட்டுள்ளன.

ஒப்பந்தங்கள் அமுலுக்கு வந்ததும் அவற்றைச் செல்லுபடியாக்கும் நாடுகளிடையே அது சட்ட பூர்வ மாகக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கைகள் ஆகிவிடும். ஒப் பந்தப்படி ஏற்படும் கடமைகளை நாடுகள் எவ்வாறு செய் கின்றன என்பதை சர்வதேச மட்டத்தில் பரிசீலிக்க ஏற் பாடு அதில் உள்ளது.

ஒப்பந்தங்கள் பல்வேறு உரிமைகளையும் தெளிவாக விவரிக்கின்றன. குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவருக் குள்ள பாதுகாப்புபற்றிக் கூறும் விதி, ஏழு குறைந்தபட்ச உத்திரவாதங்களைக் குறிப்பிடுகிறது. விசாரிக்கப்படவும், சட்ட ஆலோசக உதவி பெறவும் உள்ள உரிமைகள் உள் ளிட்டது இது. பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள சில உரிமை கள் கூட்டு ஒப்பந்தங்களில் கூறப்படவில்லை: பிரகடனத்தில் இல்லாத உரிமைகள் சில ஒப்பந்தங்களில் உள்ளன. குறிப் பாக சுயநிர்ணய உரிமை, தங்கள் அரசியல் அந்தஸ்தை தீர்மானிக்கவும் பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சியை நாடவும் எல்லா மக்களுக்கும் உள்ள உரிமை போன்றவை.

## 6 ஒப்பந்தங்களில் உள்ள எல்லா உரிமைகளும் உடனடி யாக அமுல் செய்யப்பட வேண்டுமா?

சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தில் உள்ள எல்லாவற்றையும் அவற்றை ஒரு நாடு செல்லுபடி யாகச் செய்ததுமே அமுல் நடத்த வேண்டும். ஆயினும், பொருளாதார, சமூக உரிமைகள் பற்றிய கூட்டு ஒப்பந்தம் அவற்றின் விதிகளைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கூறுகிறது. இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது. பேச்சுரிமை போன்ற ஒன்றை எந்த நாடும் உடனே அமுலுக்கு கொண்டு வந்து விடலாம். கல்வி பெற உரிமை போன்ற ஒன்றிற்கு பணம், ஆசிரியர்கள், கட்டிடங்கள் ஆகியவை தேவைப்படுவதால் படிப்படியாகத் தான் முடியும்.

## 7 உரிமைகள் பற்றி மட்டும் வற்புறுத்தினால் போதுமா? கடமைகள்?

உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இரு புறங்கள். ஐ. நா சபையோ அல்லது வேறு யாரோ மனித உரிமைகளை மதிக்குமாறு கூறினால் அதற்கு அர்த்தம் நமது உரிமைகளை வற்புறுத்த வேண்டும் என்பது மட்டுமல்ல; மற்றவர்கள் உரிமைகளையும் மதிக்கவும் வேண்டும் என்பது மாகும்.

## 8 எல்லா நாடுகளும் ஒப்பந்தங்களின்படி நடக்கின்ற னவா என்பது ஐ. நா.வுக்கு எப்படி தெரிய முடியும்?

ஒவ்வொரு நாடும் தாங்கள் மேற்கொண்டுள்ள நட வடிக்கைகள், அத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றி ஒரு சர்வதேச அமைப்புக்கு அறிக்கை அனுப்பவேண்டும். இரு ஒப்பந்தங்களிலும் இதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. பொருளாதார, சமூக உரிமைகள் ஒப்பந்தத்தைப் பொறுத்த வரையில்ஐ. நா. பொருளாதார, சமூகக் கவுன் சில் இந்த அறிக்கைகளை ஆராயும், மனித உரிமைகள் கமிஷனும், ஐ. நா. விசேஷ அமைப்புகளும் இதற்கு வேண் டிய உதவிகளைச் செய்யும். சிவில், அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்துக்கு ஒரு விசேஷ மனித உரிமைக் கமிட்டி அமைக்கப்படும்.

## 9 கடமையாற்றுவதில் இரு நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால்?

சிவில், அரசியல் உரிமைகள் கூட்டு ஒப்பந்தத்தில் இதற்கென ஒரு விசேஷ முறை கூறப்பட்டுள்ளது. ஒரு சிறுபான்மையினர் தங்கள் மதத்தைப் பின்பற்ற A என்ற நாடு அனுமதிப்பதில்லையென்று B என்ற நாடு கருதுவதாக வைத்துக்கொள்வோம். நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் பரிகாரம் காண முடியாவிட்டால் B என்ற நாடு இவ் விஷய மாக மனித உரிமைக் கமிட்டியுடன் தொடர்பு கொள்ள லாம். கமிட்டி அதைப் பரிசீலனை செய்து A என்ற நாட் டுடன் உடன்பாடு காண முயலலாம். உடன்பாடு ஏற்படா விட்டால் கமிட்டி தகராறு பற்றி அறிக்கை அனுப்பலாம். தங்களைப் பாதிக்கும் இத்தகைய பிரச்னைகளைக் கவனிக்க மனித உரிமைக் கமிட்டியை முன்னதாக அனுமதிக்கும்




Photo © Holmes Lebel - Camera Press

## யாரும் அடிமையாக இருக்கக் கூடாது

அடிமையாக யாரையும் நடத்தக்கூடாது. அடிமை முறையும் அடிமை வியாபாரமும் எல்லா உருவிலும் தடுக்கப்பட வேண்டும். யாரையும் சித்திரவதை அல்லது மிருகத்தனமான கொடுமைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தக் கூடாது.

பிரகடனம் 4, 5, பிரிவுகள்.

இருநாடுகள் விஷயத்தில் தான் இந்நடைமுறை செல்லுபடியாகும்.

**10 தங்கள் உரிமைகள் பறிக்கப்படுவது பற்றி தனிப்பட்டவர்கள் புகார் செய்ய முடியுமா?**

இரு கூட்டு ஒப்பந்தங்களையும் ஏற்றுக்கொண்ட அதே சமயத்தில் பொதுச்சபை ஏற்றுக்கொண்ட மற்ருெரு சட்டத்தையும் அவர்களது நாடுகள் செல்லுபடியாக்கினுல் தான் முடியும். சிவில், அரசியல் உரிமைகள் கூட்டு ஒப்பந்தத்துக்கான முதற்குறிப்பே அது. விருப்பமுள்ளவர்கள் இதை ஏற்றுக் கொள்ளலாம். அது கூறும் நடைமுறை வருமாறு: A என்ற நாட்டில் வசிக்கும் ஸ்மித் என்பவர் தம் பேச்சுரிமையை தமது நாட்டு சர்க்கார் பறிப்பதாகக் கூறுகிருரென்று வைத்துக்கொள்வோம். அவரது நாடு சிவில், அரசியல் உரிமைகள் கூட்டு ஒப்பந்தத்தையும் அதன் முதற்குறிப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தால், தம் நாட்டுக்குள் முயன்று திருப்தியான பலன் ஏற்படாமல் போயிருந்தால், அதுபற்றி அவர் மனித உரிமைக் கமிட்டிக்குப் புகார் செய்யலாம். கமிட்டி அதனை ஆராய்ந்து தனது கருத்தை சம்பந்தப்பட்ட நாட்டு சர்க்காருக்கும் ஸ்மித்துக்கும் தெரிவிக்கும். கமிட்டி தனது நடவடிக்கைகள் குறித்து ஒவ்வோராண்டும் பொதுச்சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**11 மனித உரிமைப் பிரகடனத்தை மதித்து நடக்குமாறு ஐ. நா. எந்த ஒரு நாட்டுக்கும் கட்டளையிட முடியுமா?**

மனித உரிமைப் பிரச்னைகளில் இறுதித் தீர்மானம் செய்யும் உரிமை ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு. எந்த சர்வதேச அமைப்பும் ஒரு நாட்டின் அதிகாரத்துக்குள் பிரவேசிக்க முடியாது. ஆனுல் ஐ. நா. சபை வகுத்துக் கூறியுள்ள தரத்திலிருந்து நாடுகள் ஆதரிசம் பெற்று அதற்கேற்பத் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**12 இறுதி அதிகாரம் நாடுகளுக்குத்தான் என்ருல் சர்வதேச அமைப்பினுல் என்ன பயன்?**

சர்வதேச அமைப்பிடம் உள்ள முக்கிய, பயனுள்ள கருவி உலகப் பொதுஜனக் கருத்துக்குப் பிரச்னையை விடுவதுதான். அறிக்கை சமர்ப்பிக்கும் நடைமுறை ஒவ்வொரு நாட்டிலும் மனித உரிமைகள் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், குறுக்கிடும் தடைகளையும் விளம்பரப் படுத்துவதற்குத்தான். கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ளவே சமரச ஏற்பாடு. சமரசப் பேச்சு வெற்றி பெருவிட்டால் அவர்கள் முக்கியமானதெனக் கருதும் பிரச்னை உலக மக்கள் முன்பு வைக்கப்படும் என்பதை அறிந்தே அவர்கள் சமரச ஏற்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ள முன் வருகிருர்கள். சர்வதேச அமைப்பு சர்வ வல்லமையுள்ளதாக இருக்க முடியாது என்பது உண்மை தான். ஆனுல் கூட்டு ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது மனித உரிமைகளை நிலைநாட்டும் துறையில் பெரும் நடவடிக்கையாக இருக்கும் என்ற உண்மையை மறைக்க முடியாது.

**13 கடந்த 20 ஆண்டுகளில் ஐ. நா. சபை வேறெந்த மனித உரிமைகள் பற்றிய நடைமுறை மரபுகளை ஏற்றுக் கொண்டுள்ளது?**

*1948*-ல் மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமே ஐ. நா. சபை குறிப்பிட்ட பல உரிமைகள் மீது உடன்பாடுகள் செய்ய முயன்றது. இன ஒழிப்பு, இனப் பாகுபாடு, அகதிகள், நாடற்றவர்கள், பெண்கள் உரிமை, செய்தி சுதந்திரம் பற்றியவை இவை. இப்பிரச்னைகளில் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள் இவை.

**14 இனப் பாகுபாடு பற்றி என்ன செய்யப்பட்டுள்ளது!**

இரண்டாவது உலகப் போரின் போது நிரபராதிகளான மக்கள் கூட்டத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளின் விளைவாக பொதுச்சபை *1948*-ல் இன ஒழிப்பு குற்றத்தடுப்பு நடைமுறை மரபை வகுத்தது. இன ஒழிப்பு என்பது ஒரு தேசிய, இன, அல்லது மதக் கோஷ்டியை அழிக்கும் நோக்கத்துடன் செய்யும் சில செயல்கள் என நடைமுறை மரபில் விவரிக்கப்பட்டுள்ளது. சமாதானம் நிலவும் காலத்திலும், போரின் போதும் இன ஒழிப்பு செய்வது சர்வதேசச் சட்டப்படி குற்றமாகும் எனக் கூறப்பட்டுள்ளது. எழுபது நாடுகள் இம்மரபை ஏற்றுக் கொண்டுள்ளன.

**15 இன ஒழிப்பு குறித்து என்ன செய்யப்பட்டுள்ளது?**

ஐ. நா. சபை சமீப ஆண்டுகளில் இப்பிரச்னை குறித்துப் பெரிதும் கவலை கொண்டு ஆராய்ந்து வந்திருக்கிறது. காலனியாதிக்க நினைவிலிருந்து விடுபடாத புதிதாகச் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் தென்னுப்பிரிக்காவிலும் வேறு இடங்களிலும் சிறுபான்மையினரான வெள்ளையர் ஆதிக்கம் குறித்துக் கவலை கொண்டுள்ளன.

தென்னுப்பிரிக்கா, தெற்கு ரொடீஷியா, போர்ச்சுக்கீசிய நிர்வாகத்திலுள்ள பகுதிகள் ஆகியவற்றின் சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கைகளை மாற்ற முயன்று அரசியல் நடவடிக்கை எடுக்கும்போது இனப்பாகுபாடும், உயர்ந்த இனம் என்ற கொள்கையும்தான் பல அரசியல் பிரச்னைகளுக்கு அடிப்படையாக உள்ளது என்பதை ஐ. நா. சபை அறிந்திருக்கிறது. அந்த இனவெறிக் கொள்கைகளை பொதுச்சபை பலமுறை கண்டித்திருக்கிறது.

எல்லாவிதமான இன வேறுபாட்டையும் அகற்றும் சர்வதேச நடைமுறை மரபை *1965*-ல் அது ஏற்படுத்தியது. நாடுகள் இம்மரபுக்கு உடன்படும் போது எல்லா விதமான வேறுபாடுகளையும் அகற்றுவதற்கும் இனங்களுக்கிடையே சமூக உறவை வளர்ப்பதற்கும் ஏற்ற கொள்கையை தாமதமின்றிப் பின்பற்றக் கடமைப் பட்டுள்ளன. *27* நாடுகள் இதனைச் செல்லுபடியாக்கினுல் இந்நடைமுறை மரபு அமுலுக்கு வரமுடியும். *1967* அக்டோபர் வரை அவ்வாறு *16* நாடுகள்தான் செய்துள்ளன.

ஐ. நா. சபை இன வேறுபாட்டை எதிர்த்துச் செயல்படக்கூடிய பயனுள்ள வழிகளில் ஒன்று உலக மக்கள் மத்தியில் அதனைத் தெரியப்படுத்துவதாகும். இத்துறையில் தன் விருப்பத்தை ஐ. நா. சபை நாடுகள் மீதும், மக்கள் மீதும் திணிக்க முடியாது. ஆனுல் அதன் தீமைகளையும் அபாயங்களையும் எடுத்துக்கூறி அகற்றுவதற்கான வழியைக் கூறலாம். *1967*-ல் முதன்முறையாகக் கொண்டாடப்பட்ட 'இனப்பாகுபாட்டை அகற்றுவதற்கான சர்வதேச தினம்' இந்த நோக்கத்தைக் கொண்டதுதான்.

**16 இதர விதமான வேறுபாடுகள் குறித்தும் ஐ. நா.வுக்கு அக்கறை உண்டா?**

ஆம். *1947*-ல் ஏற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் பாதுகாப்பு மற்றும் அவர்களிடம் பாகுபாடு காட்டுவதைத் தடுப்பது பற்றிய ஐ. நா. உப கமிஷன் இனம், நிறம் தவிர இதர் துறையில் நிலவும் வேறுபாடு பற்றி ஆராய்ந்து வருகிறது. *1967*-ல் பொதுச்சபை எல்லா விதமான மத சகிப்பின்மையையும் அகற்றும் நகல் நடைமுறை மரபை வகுத்தது.

ஐ. நா. தொடர்புள்ள அமைப்புக்கள் தத்தம் துறையில் வேறுபாடுகளுக்குக் கெதிராகச் செயல்பட்டுள்ளன. கல்வியில் வேறுபாட்டுக் கெதிராக யுனெஸ்கோ ஒரு நடைமுறை மரபை ஏற்றுக் கொண்டுள்ளது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் வேலையில் வேறுபாடு குறித்து ஒரு மரபை ஏற்றுக் கொண்டுள்ளது. இது குறித்துத் தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி எல்லா நாட்டு சர்க்கார்களும் அவ்வப்போது அறிக்கை அனுப்பவேண்டும். தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளும் இவற்றில் உள்ளன.

**17 பெண்களிடம் பாரபட்சம் காட்டுவது குறித்து செய்தது என்ன?**

பெண்கள் நிலைபற்றி ஆராய அமைக்கப்பட்ட கமிஷன் பாரபட்சத்தை அகற்றுவதற்கான பிரகடனத்தைத் தயார் செய்தது. *1967* நவம்பர் *7*ந் தேதி பொதுச்சபை இதனை ஏற்றுக் கொண்டது. இதற்கு வெகு காலம் முன்பே பல தொடர் நடவடிக்கைகள் மூலம் ஐ. நா. சபை பெண்கள் உரிமையை வளர்க்கத் தொடங்கியது.

பெண்களின் அரசியல் உரிமைகள் பற்றி *1952*-ல் பொதுச்சபை ஏற்றுக்கொண்ட மரபு ஓட் போடுதல், பொது ஸ்தாபனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுதல்,

பொது அலுவல்களைச் செய்தல் ஆகியவற்றில் ஆண்களுக்குள்ள அதே உரிமை பெண்களுக்கும் இருக்கவேண்டும் என்கிறது. (1966-ம் ஆண்டுவரை 114 நாடுகளில் பெண்களுக்கு ஓட்டுரிமை இருந்தபோதிலும், எட்டு நாடுகளில் மறுக்கப்பட்டுள்ளது).

1957-ல் உருவான மணமான பெண்களின் குடியுரிமை பற்றிய மரபு, மற்றொரு நாட்டினரை மணந்து கொண்டதன் காரணமாக ஒரு பெண்ணின் குடியுரிமை தானாகப் பாதிக்கப்படக்கூடாது என்கிறது. இருவரும் நேர்முகமாகத் தெரிவிக்கும் பூரண, சுதந்திர ஒப்புதல் இன்றி எந்தத் திருமணமும் சட்ட பூர்வமானதாகாது என்று 1962-ல் உருவான மற்றொரு மரபு கூறுகிறது.

பெண்கள் தொழில், பயிற்சித் திட்டங்களில் பங்கு கொள்வதைப் பெண்கள் நிலை பற்றிய ஐ. நா. கமிஷன் ஆதரித்து வந்துள்ளது. பெண்கள் கல்வி வாய்ப்புகள் பெருகுவதற்கான யோசனைகளைக் கூறியுள்ளது. குழந்தைகளை வளர்ப்பதில் தந்தைக்குள்ள அதே உரிமை தாய்க்கும் வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனமும் யுனெஸ்கோவும் கூடப் பெண்கள் உரிமைகளை வளர்த்து வந்துள்ளன. முன்னது சமவேலைக்கு இருபாலாருக்கும் சம ஊதியம் தரப்படவேண்டுமென்றும், பின்னது பெண்களுக்குக் கல்விபெற சம வாய்ப்பு இருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளது.

### 18 அகதிகளுக்கு உதவ ஐ. நா. செய்துள்ளது என்ன ?

மனித உரிமைத் துறை முழுவதிலும் ஐ. நா. செய்துள்ள நடைமுறை சாத்தியமான சில வேலைகள் அது அகதிகளுக்குச் செய்துள்ள உதவியாகும். போரினால் பாதிக்கப்பட்ட முப்பது லட்சம் பேருக்கு மேற்பட்டவர்களுடைய விதியும், கொடுமையும், எழுச்சியும் ஐ. நா. வின் பிரச்னைகளாகும். இவர்களில் சிலர் ஐ. நா. நிதியுதவியில் பராமரிக்கப்படுகிறார்கள். குறிப்பாக பாலஸ்தீனத்திலிருந்து வந்த லட்சக்கணக்கான அரபு அகதிகள். 1967-ல் பத்து லட்சம் பேர்களாக இருந்த இவர்களுக்கு வீடும், உடையும், கல்வியும் ஓரளவாவது அளிக்கப்பட்டுள்ளது.

உலகின் இதர பகுதிகளிலுள்ள 20 லட்சம் அகதிகள், ஐ. நா. வின் அகதிகள் பராமரிப்பு கமிஷனர் கீழ் உள்ளனர். 1966-ல் ஐரோப்பாவின் கடைசி அகதிகள் முகாம் மூடப்பட்டது. ஆயினும் ஆப்பிரிக்காவின் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள் வெளிநாடுகளில் உள்ளனர். இவர்களுக்கு வாழ்வளிக்கக் கமிஷன் உதவிவருகிறது.

### 19 நாடற்றவர்கள் பிரச்னை குறித்துப் பொதுவாக ஏதேனும் செய்துள்ளதா ?

தங்களுக்கென ஒரு நாட்டுரிமை இல்லாதவர்களை நடத்தும் தரம் குறித்து இவர்கள் நிலைபற்றிய 1954-ம் ஆண்டு நடைமுறை மரபு கூறியுள்ளது. இப்பிரச்னை பெருகுவதைக் குறைக்க எந்த நாட்டில் ஒருவர் பிறந்தாரோ அந்த நாட்டுரிமை அவருக்கு உண்டென்றும், வேறொரு நாட்டுரிமையைப் பெறாத வரையில் உள்ள உரிமையை இழந்தவராகமாட்டார் என்றும் 1961-ல் ஒரு மரபை வகுத்தது. ஆயினும் இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. இதிலுள்ள சிக்கலும், பலதரப்பட்ட குடியுரிமைச் சட்டங்களும் இப்பிரச்னையை மிகவும் கஷ்டமானதாகச் செய்துள்ளன.

### 20 செய்தி சுதந்திரம் பற்றி என்ன செய்யப்பட்டுள்ளது?

இந்த உரிமை தான் எல்லா சுதந்திரங்களுக்கும் உரைகல் என்று பொதுச்சபை அங்கீகரித்துள்ளது. ஆயினும் எழுத்துபூர்வமாக இந்த உரிமையைத் திட்ட வட்டமாகக் கூறும் முயற்சி இன்னும் வெற்றிபெறவில்லை. சமூகத்தில் பத்திரிகைகளின் பங்கு குறித்து பல்வேறு நாடுகளும் பலவித மான கருத்துக்கொண்டிருப்பது பிரதான பிரச்னைகளில் ஒன்றாகும். ஆயினும் இப்பிரச்னை சபையின் பரிசீலனையில் எப்போதும் இருந்து வருகிறது.

இதற்கிடையில் சபை சர்வதேசத் திருத்தும் உரிமை பற்றிய நடைமுறை மரபு ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது. 1962ல் அமுலுக்கு வந்த இது இன்னொரு நாட்டில் தவறான செய்தி வெளியிடப்பட்டால் அதைத் திருத்துவதற்கு உரிமையளிக்கிறது. 1967 செப்டம்பர் 21ந்தேதிவரை 8நாடுகள் இதற்கு உடன்பட்டுள்ளன.

### 21 தொழிலாளர்கள் உரிமைகளைப் பற்றி என்ன செய்யப் பட்டு வருகிறது ?

சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் பிரச்னை இது. அந்த ஸ்தாபனம் 250 க்கு மேற்பட்ட மரபுகளையும் சிபாரிசுகளையும் கூறியுள்ளது. வேலைநேரம், குறைந்த பட்ச ஊதியம், பிரசவகாலப் பாதுகாப்பு, விபத்துக்கள் போன்ற எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய சர்வதேசத் தொழிலாளர் சட்டத்தொகுப்பு ஒன்றையும் செய்துள்ளது. கட்டாயக்கூலி முறையை ஒழிப்பது, தொழிற்சங்கம் அமைத்துக்கொள்ள உரிமை போன்றவை நடைமுறை மரபுகளில் முக்கியமானவையாகும்.

தொழிலாளர்களும் முதலாளிகளும் கைக்கொள்ள வேண்டிய தரம் பற்றியும் அந்த ஸ்தாபனம் சர்க்கார்களுக்கு ஆலோசனை கூறுகிறது. தொழிற்சங்க உரிமைகள் மீறப்படுவதைக் கவனிக்க அதனிடம் விசேஷ ஏற்பாடுகளும் உள்ளன. சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் வேலை முழுவதும் தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது பற்றியதாகும்.

### 22 அடிமை முறை இன்னும் இருக்கிறதா ?

அடிமை முறையும் அது போன்ற வழக்கங்களும் இன்னமும் உலகின் சில பகுதிகளில் காணப்படுகின்றன. இப்பிரச்னை, ஐ. நா. சபையின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. அடிமை வியாபாரத்தையும், எல்லா விதமான அடிமை முறையையும் ஒழித்துவிட இது பற்றிய நடைமுறை மரபில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. வேறுநடவடிக்கைகள் ஐ. நா.வின் பல்வேறு அமைப்புகளால் ஆராயப்பட்டு வருகின்றன. (32ம் பக்கம் காண்க).

### 23 குழந்தைகள் உரிமைகளுக்கு விசேஷக் கவனம் செலுத்தப்படுகிறதா ?

உலகக் குழந்தைகளுடைய நலத்தையும் உரிமைகளையும் ஐ. நா. குழந்தைகள் நிதி கவனித்துக் கொள்கிறது. மருந்துகளையும் சாதனங்களையும் வழங்குவதன் மூலமும் வேறு பல உதவிகள் மூலமும் குழந்தைகளுடைய நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கிறது. ஐ. நா அமைப்புகளிலேயே முதலில் ஏற்பட்ட ஒன்றாகும் இது. தேவைப்படும் இடத்துக்கு நேரடியாக இது உதவியளிக்கிறது. பொதுச்சபை 1959ல் குழந்தைகள் உரிமைப் பிரகடனத்தை ஏகமனதாக வெளியிட்டது.

### 24 இளைஞர்கள் நிலை என்ன ?

சமாதான லட்சியத்தை இளைஞர்களிடையே வளர்க்க வேண்டும் என்ற பிரகடனத்தை பொதுச்சபை 1965ல் வெளியிட்டது. பலநாட்டு மக்களிடையே பரஸ்பர மதிப்பும் நல்லெண்ணமும் ஏற்படவேண்டுமென்று அது கூறியது. தங்கள் கல்வி, எதிர்கால நலன் குறித்து அக்கறை கொண்டுள்ள இளைஞர்கள் சமாதானம், சுதந்திரம், சமத்துவம் ஆகிய லட்சியங்களைப் போற்றுவதற்கான வழிகளையும் அது கூறியுள்ளது. இவற்றை அடைவதில் குடும்பத்தின் பங்கையும் அது வற்புறுத்துகிறது.

### 25 கல்வி உரிமை பற்றி செய்யப்படுவது யாது ?

உலகில் போதிய பள்ளிகள் இல்லாததால் பாதிக் குழந்தைகள் படிக்க முடிவது இல்லை. வயதானவர்கள் 10ல் 4 பேருக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. இந்த நிலையில் கல்வியை வளர்க்கப் பெரும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. கல்வித் திட்டங்களை வகுக்கவும்,

ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவும், நல்ல பாடப்புத்தகங்களைத் தயாரிக்கவும் நாடுகளுக்கு யுனெஸ்கோ உதவி வருகிறது.

1965ல் யுனெஸ்கோ சர்வதேச எழுத்தறிவு இயக்கம் ஒன்றை நடத்தியது. ஐ. நா அபிவிருத்தி நிதி மற்றும் சம்பந்தப்பட்ட நாடுகள் தந்த நிதியைக் கொண்டு ஆறு பெரிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நூற்றுண்டு முடிவதற்குள் உலகில் அறியாமையை ஒழித்து எல்லாக் குழந்தைகளுக்கும் குறைந்தபட்சமாக ஆறுண்டுக் கல்வியாவது வழங்க உலகநாடுகள் பாடுபடவேண்டும் என்று யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் கூறியுள்ளார்.

**26 தங்கள் உரிமைகள் பறிக்கப்படுவதாக தனி நபர் கருதினல் ஐ. நா. வுக்குப் புகார் செய்ய வழி இருக்கிறதா?**

தனிநபர்களிடமிருந்தும் கோஷ்டிகளிடமிருந்தும் மனித உரிமைகள் மீறப்படுவதாகப் பல புகார்கள் வருகின்றன. ஆயினும் அது இவ்விஷயமாக நடவடிக்கை எதையும் எடுக்க முடியாது. மனித உரிமைகள் கமிஷனுக்கு செய்தி தெரிவிப்பதற்காக ரகசியமாக இத்தகவல்கள் அனுப்பப்படுகின்றன. குறிப்பான சில புகார்கள், சம்பந்தப்பட்ட சர்க்கார்களுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. ஐ. நா. டிரஸ்ட் பிரதேசங்களிலுள்ள நிலைபற்றி நடவடிக்கை எடுக்க விசேஷ வழிவகைகள் உள்ளன.

**27 ஐ. நா. தர்மகர்த்தா கவுன்சில், காலனி ஆதிக்க ஒழிப்புக் கமிட்டியின் வேலைக்கும் மனித உரிமைகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?**

தர்மகர்த்தா கவுன்சில் அதன் கீழுள்ள பிரதேசங்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுகிறது. ஒவ்வொன்றிலும் நிலவும் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி நிலைமைகளைக் கவனிக்கிறது. இவையெல்லாம் மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவை.

தற்போது நாரு, நியூகினி, பசிபிக் தீவு ஆகிய மூன்று தர்மகர்த்தாப் பிரதேசங்கள் உள்ளன. முன்பு 11 இருந்தன. மீதி எட்டும் சுயாட்சி பெற்றுவிட்டன. ஐ. நா. மேற்பார்வையில் வாக்கெடுப்பு நடத்தி இவ்வாறு செய்யப்பட்டது.

காலனியாதிக்க ஒழிப்பு கமிட்டியின் முக்கிய வேலை சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதாகும். கமிட்டி பொதுத்தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்கக் கோரலாம். ஒரு தேதி குறிப்பிட்டு சுதந்திரம் வழங்கலாம்.

**28 மனித உரிமைப் பிரகடனத்தின் 20 வது ஆண்டு நிறைவைக் கொண்டாட என்ன செய்யப்பட்டு வருகிறது?**

மனித உரிமைகளுக்கான சர்வதேச ஆண்டாக 1968ஐ ஐ. நா. வகுத்துள்ளது. ஐ. நா. சபையும், பலநாட்டு சர்க்கார்களும், தனிப்பட்ட ஸ்தாபனங்களும் இதனைக் கொண்டாடப் பல திட்டங்களைத் தீட்டியுள்ளன. கடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்கும் மேலான ஒன்றுக இது இருக்கவேண்டுமென்று பொதுச்சபை விரும்புகிறது. மனித உரிமைத்துறையில் தேசிய, சர்வதேசிய முயற்சிக்கு 1968ஐ அர்ப்பணிக்க வேண்டுமென்று அது யோசனை கூறியுள்ளது. மனித உரிமைக்கான நடைமுறை மரபில் எல்லா நாடுகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

1968 ஏப்ரலில் ஐ. நா. சர்வதேச மாநாடு ஈரான் நாட்டிலுள்ள டெஹ்ரானில் நடைபெறும். 1948 முதல் மனித உரிமைத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை இம் மாநாடு ஆராயும். மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பது பற்றிய திட்டம் வகுக்கப்படும்.

**29 ஐ. நா. வின் மனித உரிமை நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எவ்வாறு உருவாகும்?**

போதிய அளவு நாடுகள் செல்லுபடியாகச் செய்துவிட்டால் இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய நடைமுறை மரபும், மனித உரிமைகள் பற்றிய சர்வதேசக்கூட்டு ஒப்பந்தங்களும் அமுலுக்கு வரும். அப்போது புதிய பொறுப்புகளும் அமைப்புகளும் ஐ. நா. வுக்கு ஏற்படும்.

மனித உரிமைகள் பற்றிய தரங்களை வகுப்பதில் முக்கிய முன்னேற்றம் ஏற்படுவதுடன் மனித உரிமைகளை மதிக்குமாறு செய்யவும், மீருமல் தடுக்கவும் சர்க்கார்களுடன் ஐ. நா. பயனுள்ள முறையில் ஒத்துழைக்க முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன ஒதுக்கல் கொள்கை, இனப்பாகுபாடு போன்றவற்றை ஆராய மனித உரிமைக் கமிஷனை அனுமதிக்கும் முடிவு ஒன்று பொருளாதார, சமூக கவுன்சிலில் செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒரு ஹை கமிஷனரை நியமிக்கும் யோசனையை பொது சபை பரிசீலித்து வருகிறது (26ம் பக்கம் காண்க)

இந்தப் புதிய நடவடிக்கைகள் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் துறையில் சர்வதேச அமைப்புக்கு மேலும் அதிகப் பொறுப்புக்களை ஏற்படுத்தும். இந்த விரிவான பங்கு ஐ. நா வுக்கு அளிக்கப்படுமா என்பது சர்க்கார்களுடைய முடிவையும் மக்களுடைய ஆதரவையும் பொறுத்தது.

**30 தனி நபர்கள் என்ன செய்ய முடியும்?**

மனித உரிமைகள் பற்றி தனிநபரின் கடமை எளிதாகத் தோன்றுவதால் நம்மில் பலர் அதை அலட்சியம் செய்கிறோம். நமது உரிமைகள் என்னவென்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் அவை மீறப்படும்போது அறிந்து கொள்ள முடியும்.

ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். பண வசதியில்லாததால் ஓர் இளைஞன் கல்லூரிப்படிப்பு படிக்க முடியவில்லை யென்றுல் நாம் அதற்கு அனுதாபப்படுவதற்கு மேல் எதுவும் செய்வதில்லை. மனித உரிமைப் பிரகடனத்தில் கூறப்பட்டிருப்பது போல் கல்வி பெற எல்லோர்க்கும் சம வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதையுணர்ந்து பார்ப்போமானல் அனுதாபம் தெரிவிப்பதுடன் அமையாது பரிகாரம் காண முயலுவோம்.

நமது உரிமைகளைப் புரிந்து கொண்டதும் நமது அடுத்த பொறுப்பு அதை வளர்ப்பதாகும். நமக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் அந்தப் பொறுப்பு நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களிலிருந்து தொடங்குகிறது. நாமாகவும் மற்றவர்களுடன் சேர்ந்தும் உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்கலாம். ஒவ்வொருவரும் தன் நாடு மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்குமாறு செய்யப் பாடுபடலாம். மற்ற நாடுகள் இத்துறையில் என்ன செய்கின்றன என்பதைப் படித்தறிந்து அவர்கள் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளலாம்.

மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேணுவது ஐ. நா. வின் பிரச்னையாகும். வாழ்க்கை நடத்தப் போதிய வருவாய் இருந்தாலன்றி உரிமைகளைப் பூரணமாக அனுபவிக்க முடியாது. இதை மனதில் கொண்டே ஐ. நா. வின் பொருளாதார, சமூக, வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஒரு நாட்டுக்கு சுயநிர்ணய உரிமை இல்லையென்றுல் அந் நாட்டிலுள்ளவர்கள் சுதந்திரமாக இருக்க முடியாது. எனவே காலனி மக்களுக்கு விடுதலையளிக்க ஐ. நா. செய்து வரும் முயற்சிகள், அடிப்படையில் மனித உரிமைகள் வழங்கும் முயற்சியேயாகும்.

நமது உலகம் பல்வேறு அரசியல் கொள்கைகளும், இனங்களும், மதங்களும் கொண்டது. பொருளாதார வளர்ச்சியிலும் வேறுபாடு உள்ளது. இந்த வேறுபாட்டினிடையே மனித உரிமைகள் பற்றிய பொதுவான தரத்தை ஏற்படுத்தினல் மக்களிடையே ஆழ்ந்த பிணைப்பை ஏற்படுத்தியவர்களாவோம். நாடுகளிடையே அமைதியான உறவுக்கும், பயனுள்ள முறையில் பொருளாதார, சமூக, கலாசார ஒத்துழைப்புக்கும் அது அவசியமானதாகும்.

---

*** இந்த 30 கேள்விகளும் இவ்வாண்டு வெளியிடப்பட இருக்கும் "ஐ. நா. வும் மனிதர்களும்" என்ற பிரசுரத்திலிருந்து எடுக்கப்பட்டவை.**




Photo WHO - Paul Almasy

## நல்ல முறையில் வாழ்வதற்கு உரிமை

உணவு, உடை, இருப்பிடம், வைத்திய வசதி உட்பட தனக்கும் தன் குடும்பத்தின் நலனுக்கும் போதுமான வாழ்க்கைத் தரம் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

உரிமைப் பிரகடனம் பிரிவு 25

# யுனெஸ்கோவும் மனித உரிமைகளும்

உலக நாடுகளுக்கிடையில் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஒத்துழைப்பை உருவாக்குவதன் மூலம் உலக அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் உழைப்பதே யுனெஸ்கோவின் நோக்கம். அதன் சட்ட திட்டங்களில் இது எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. நீதி, சட்ட ஆட்சி, மானிட உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள் ஆகியவை, மொழி, நிறம், மதம் முதலிய பாகுபாடுகளின்றி எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமானல், மேற்கூறிய நோக்கம் நிறைவேற வேண்டும்.

எல்லா யுனெஸ்கோ திட்டங்களும், இம்மகத்தான லட்சியங்களை மனதிற் கொண்டே வகுக்கப்படுகின்றன. கல்வி, விஞ்ஞானம், இயற்கை முதலியவற்றைப் போன்ற எத்துறையை எடுத்துக்கொண்ட போதிலும் சரி, யுனெஸ்கோவின் வேலைத் திட்டங்கள் எல்லாம் மானிட உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இப்படி உரிமைகளைப் பாதுகாப்பதும் உலக அமைதிக்குப் பாடுபடுவதும் மிக நெருங்கிய தொடர்புடைய வேலைகள்.

பொதுவாக மானிட உரிமைகளெல்லாவற்றையுமோ, அல்லது அவற்றில் ஒரு பகுதியையோ யுனெஸ்கோ நேரடியாக வளர்க்கவில்லையே என்று தோன்றலாம். ஆயினும் அவ்வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்களை யுனெஸ்கோ தேடிக் கொடுக்கிறது. அறிவு, நியதி, பண்பு ஆகியவை நிறைந்த சூழ்நிலையை உண்டாக்குகிறது. மனித உரிமைகள் வெறும் கொள்கைகளாக இல்லாமல், வாழ்வுடன் இணைந்து விளங்க வேண்டுமானல், இப்படிப்பட்ட சூழ்நிலை மிகவும் அவசியம்.

மேலும் மனித உரிமைகள் எல்லாவற்றையும் பெறுவதற்கும், அனுபவிப்பதற்கும் இன்றியமையாத சூழ்நிலையை அடைவதே பொருளாதார, சமூக முன்னேற்றத்தை அர்த்தமுள்ளதாகச் செய்கிறதென்று யுனெஸ்கோ கருதுகிறது.

கல்வியில்லாமல் அபிவிருத்தி இல்லை. அபிவிருத்தியில்லையேல் மனித உரிமைகள் என்ற வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை. எனவே மனித உரிமைகளைப் பெறக் கல்வி, மறைமுகமாக உதவுகிறது. அத்துடன் அவ்வுரிமைகள் பெற்று அவற்றல் பயன்பெற வேண்டுமானல் ஒவ்வொருவரும் போதிய அறிவு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவ்வளர்ச்சியைப் பெறுவதற்கு உதவுவதன் மூலமாகக் கல்வியானது, மனித உரிமைகளைப் பெறும் லட்சியத்திற்கு நேரடியாக உதவுகிறது. மனித உரிமை சாசனப் பிரகடனத்தில் கல்வி அடிப்படை உரிமையாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

தற்கால விஞ்ஞான முன்னேற்றங்கள் அபிவிருத்திக்கு ஒத்த முறையில் நிறுவப்பட்டு வருகின்றன. வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை உற்பத்தி செய்வதில் அவை மாபெரும் மாறுதல்களைச் செய்கின்றன. அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதன் மூலம் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வது இப்போது சற்று சுலபமாக இருக்கும். பல நாடுகளில் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளைப் பெறுவதற்கு இன்று தடையாய் இருக்கும் பல இன்னல்களை விஞ்ஞான முன்னேற்றம் குறைக்க உதவுகிறது.

மேலும் நம் தற்கால விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் உலகத்தின் தன்மையையும் உலக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பிடத்தக்க முறையில் மாற்றியமைத்து வருகின்றன. எனவே விஞ்ஞானத்தையும், விஞ்ஞான முறைகளையும் அறிந்து கொள்வது ஒவ்வொருவருடைய அடிப்படை உரிமையாகவும் ஆகிறது. மனிதன் அவன் வாழும் உலகத்தையும், அதில் தன்னுடைய இடம் என்னவென்பதையும் புரிந்து கொள்ள வேண்டுமானல் ஓரளவு விஞ்ஞான அறிவு அவனுக்கு வேண்டும். இவ்வறிவைக் கொண்டே அவன் என்ன செய்ய முடியும், முடியாது என்று தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு நாட்டினுடைய கலை, இலக்கியப் பொக்கிஷங்கள் உலக மக்கள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். கலாசாரம் இப்படி பரவுவதன் மூலமாக உலக மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்கிருர்கள். அத்துடன் கலை மனித குலம் முழுவதற்கும் பொதுவான ஒரு செல்வம் என்றும் நாம் உணர முடிகிறது. கலாசாரப் பரிவர்த்தனை மூலமாக சர்வதேச நட்புறவுகள் வளருகின்றன. மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்கிருர்கள்.

ரேடியோ, டெலிவிஷன்கள், திரைப்படங்கள், பத்திரிகைகள், பார்க்கப் போனல் செய்திப் போக்குவரத்திற்கு உதவும் எல்லா நவீன சாதனங்களும் மனித உரிமைகளைக் கொண்டு வருவதற்கு அவசியமானவை. உரிமைப் பிரகடனத்தின் 19வது ஷரத்தில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ''செய்திகளையும், கருத்துக்களையும் மற்றவர்களுக்கு அனுப்பவும், பெறவும் எல்லாருக்கும் உரிமையுண்டு. இதற்கு நாட்டின் எல்லைகளோ, மக்கள் உபயோகிக்கும் சாதனங்களோ தடையாக இருக்க முடியாது.''

குறிப்பிட்ட நாடுகளின் தேவைக்கு ஏற்ற முறையில் மக்களுடன் தொடர்பு கொள்ளும் ஸ்தாபனங்களை நிறுவவும் அபிவிருத்தி செய்யவும் யுனெஸ்கோ முயற்சித்து வந்திருக்கிறது. எல்லா மனித உரிமைகளையும் அவற்றுடன் தொடர்பு கொண்ட ஐ. நா. கொள்கைகளையும் மக்களிடையில் பரப்புவதற்கு மேற்கூறிய ஸ்தாபனங்களை உபயோகிக்கலாம்.

மனிதர்கள் இடையிலுள்ள ஏற்றத்தாழ்வுகள், இன, மத வேறுபாடுகள் ஆகியவற்றை ஒழிக்கும் போராட்டத்தில் சமூக விஞ்ஞானங்கள் பெரும்பாலும் உதவுகின்றன. மனித உரிமைகள்பற்றி பலருக்குப் பல மாதிரியான கருத்துக்கள் இருக்கலாம். அவற்றை அலசி ஆராய்ந்து உண்மையைக் காண்பதற்கு இந்த சமூக விஞ்ஞானங்கள் உதவுகின்றன. சில உரிமைகளைப் பெறுவதில் மக்களுக்குத் தோன்றும் இடையூறுகளை எப்படிச் சமாளிப்பதென்றும் அவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறேம். ஒரு நாட்டின் பண்பு, பொருளாதார சமூகத் துறைகளில் ஒரு நாட்டிற்கும் மற்றெரு நாட்டிற்குமுள்ள மாறுபாடு, ஆகியவற்றை ஆராய்ந்து ஒரு முடிவு காண்பதில் சமூக விஞ்ஞானங்கள் உதவுகின்றன.

இவ்வாறு யுனெஸ்கோவின் வேலைத் திட்டம் மனித உரிமைகள் யாவற்றையும் பெறுவதற்குத் தகுந்த முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் கொள்கை, லட்சியம், வேலைமுறை, வேலைத்துறை—எல்லாமே இந்நோக்கத்திற்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**மனித உரிமைகளுக்கான யுனெஸ்கோவின் பணி பற்றிய முழு விவரத்துக்கு ஏப்ரலில் டெஹ்ரானில் நடைபெற்ற மாநாட்டுக்கு யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் சமர்ப்பித்துள்ள அறிக்கையைக் காண்க.**

# ‘கற்றவர்கள்தான் சுதந்திரமாக இருக்கிறார்கள்’

—எபிக்டேடஸ்

**லூயி பிராங்காய்ஸ்**

கல்வி பெற உரிமைப் பிரகடனத்திலிருந்து அதை சாதிப்பதற்கான பாதை நீண்டது, கரடு முரடானது, எல்லாவிதமான தடைகளும் கொண்டது. முன்னேற்றம் எதிர்பார்த்ததை விட மெதுவாகவும் கஷ்டம் நிறைந்ததாகவும் இருந்து வந்திருக்கிறது. 20 ஆண்டு முயற்சிகளுக்குப் பிறகு பல நாடுகள் இன்னும் எல்லோருக்கும் கல்வி வழங்கும் லட்சியத்தை அமுல்நடத்தப் போராடிக் கொண்டிருக்கின்றன. முன் முயற்சி எடுத்துள்ள நாடுகளுக்கும் அந்த லட்சியம் வெகு தூரத்திலிருப்பது போலத் தோன்றுகிறது. நாம் வாழும், மாறி வரும் உலகில் அது இடைவிடாது பின்னணிக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகளைக் காண்போம். உலக மக்கள் தொகை 1960ல் 300 கோடியாக இருந்தது. 1980ல் அது 400 கோடிக்கு மேல் போய்விடக் கூடும். 2000ம் ஆண்டில் 600 கோடியாகிவிடும். மக்கள் தொகைப் பெருக்க முன்னணியில், வளர்ந்து வரும் நாடுகள் உள்ளன. லத்தீன் அமெரிக்காவும், ஆப்பிரிக்காவும் உயர்ந்த அளவு மக்கள் தொகைப் பெருக்க விகிதத்தைக் கொண்டுள்ளன. ஆசியாவைப் பற்றிய சரியான விவரம் எப்போதும் கிடைப்பது இல்லை.

---

**லூயி பிராங்காய்** *பிரான்சின் பொதுக் கல்வி மேலாளரும், யுனெஸ்கோவுக்கான பிரெஞ்சு தேசியக் கமிஷனின் உப தலைவருமாவார். உலகின் கல்விப் பிரச்சினைகள் குறித்து அவர் செய்துள்ள ஆராய்ச்சியில் சர்வதேச உணர்வை வளர்ப்பதிலும் சரித்திரம், பூகோளத்தில் குடியுரிமையைப் போதிப்பதையும் விஷேசமாக கவனித்துள்ளார்.*




Photo Unesco-Almasy-Vauthey

### கல்வி பெற உரிமை

எல்லோர்க்கும் கல்வி பெற உரிமையுண்டு. ஆரம்பக் கட்டத்திலாவது கல்வி இலவசமாக இருக்க வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயமாக இருக்க வேண்டும். தொழில் கல்வி பொதுவாகக் கிடைக்கும்படி செய்வதுடன் உயர்தரக் கல்வி தகுதி அடிப்படையில் எல்லோரும் அடையக்கூடியதாக இருக்கவேண்டும்.

— மனித உரிமை பிரகடனம் 26 வது பிரிவு

# உலக இலட்சியம்
# 1980க்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி

வட அமெரிக்கா, சோவியத் யூனியனுடைய அதிகரிப்பு விகிதம் ஐரோப்பாவுடையதைப்போல இருமடங்காகும். கல்வித் தேவை அதிக அளவில் இருக்கும் வளர்ந்து வரும் நாடுகள்தான் உலக மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கைக் கொண்டுள்ளன. 1980ல் இது 70% ஆகவும் 2000ல் 75% ஆகவும் ஆகக்கூடுமென மதிப்பிடப்படுகிறது. மேலும் உலக மக்கள் தொகை பெருகப் பெருக அதன் சராசரி வயது குறைகிறது.

எனவே கல்வி தாண்ட வேண்டிய முதல் தடை அளவுபற்றியது. எந்தக் கல்வி மந்திரியுமுடைய முதல் கடமை போதிய அளவு பள்ளிகளையும் ஆசிரியர்களையும் ஏற்படுத்துவதாகும்.

### வளர்ந்து வரும் நாடுகள்

கல்விப் பிரச்சினையைக் கவனிக்க லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்படும் வரை காத்துக் கொண்டிருக்கவில்லை. அவை எல்லாவற்றுக்கும் கல்வி சம்பந்தமான கொள்கைகளும் திட்டங்களும் நீண்ட காலமாக இருந்தன.

ஆனால் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் குறிப்பிட்ட அளவு குழந்தைகள் தான் ஒவ்வோராண்டும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கல்வியை விஸ்தரிக்க முயற்சி செய்த போதிலும் கூட படிக்காதவர்கள் தொகையைவிடப் படித்தவர்கள் தொகை குறைந்து கொண்டே வந்தது. 12 நாட் வேகத்தில் ஓடும் நீரோட்டத்துக்கு எதிராக 8 நாட் வேகத்தில் செல்லும் கப்பல் ஒன்றின் நிலையுடன் இதை ஒப்பிடலாம்.

கடந்த பத்தாண்டுகளில் இந்த இயக்கம் நேர்மாறாகச் செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கும் விகிதம் அதிகரித்து வருகிறது. ஆசிரியர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ''போதனைத்தரத்தைக் கெடாமல் பாதுகாக்க முடியுமா?'' என்ற கேள்வியையும் அது எழுப்பியுள்ளது.

யுனெஸ்கோ கூட்டிய பிராந்திய மாநாடுகளில் வளர்ந்து வரும் நாடுகள் 1980ல் தங்கள் லட்சிய இலக்கு பற்றிக் கூறியுள்ளன. ஆப்பிரிக்காவின் கல்விப் பிரச்சினைகள் பற்றி ஆராய 1961ல் அடிஸ் அபாபாவில் நடைபெற்ற மாநாடு ஆரம்பக் கல்வி இலக்கு 100% என்றும் நடுத்தரக் கல்வி 23% என்றும் உயர்தரக் கல்வி 2% என்றும் நிர்ணயித்தது.

லத்தீன் அமெரிக்க நாடுகள் 150 ஆண்டுகளாக சுதந்திரமாக உள்ளன. இவை ஐரோப்பாவிலிருந்து குடியேறிய ஏராளமான ஸ்பானிஷ், போர்ச்சுக்கீசிய மொழி பேசுவோர்களைக் கொண்டவை. ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கான யுனெஸ்கோவின் மாபெரும் திட்டத்தின் கீழ் பத்தாண்டுகள் உதவியளிக்கப்பட்டார்கள். இதன்மூலம் இதர பகுதிகளைவிட அதிக அளவு கல்வி வளர்ச்சி இங்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஆரம்பக் கல்வி வளர்ச்சி ஒத்தாற்போல் இல்லை. 40% குழந்தைகள் படிக்கும் பொலிவியாவும் 50% கொண்ட பிரேஸிலும் இன்னும் வெகு தூரம் முன்னேற வேண்டியுள்ளது. கொலம்பியாவில் 1950ல் 42%ஆக இருந்தது 1965ல் 80%ஆக அதிகரித்துள்ளது. பனமாவில் 85% உருகுவே, அர்ஜென்டினாவில் 95% டிரினிடாட், டோபாகோவில் 97%.

ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பது கிட்டத்தட்ட மக்கள் தொகை அதிகரிப்புக்கேற்ப இருந்த போதிலும் நடுத்தர, உயர்தரக் கல்வித் துறையில் மேலும் அதிக அளவு துரித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தேர்ந்த தொழிலாளர்களை நிறையப் பயிற்றுவித்து சமூக சமநிலை ஏற்படுத்தச் செய்யப்படும் முயற்சிகளே இதற்குக் காரணம்.

லத்தீன் அமெரிக்காவின் கல்வி அமைப்பிலுள்ள பாராட்டத்தக்க அம்சம் பால், இனம், மத அடிப்படையில் வேறுபாடு எதுவும் இல்லாததாகும். மற்றொரு புறத்தில் சிறுபான்மையினருக்கு மட்டும் சாதகமாகவுள்ள பொருளாதார சமூக நிலைகள் பெரும்பான்மையினருக்கு சுமையாக இருப்பது கல்வி வளர்ச்சியில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

கல்வித் துறையில் நிலவும் பல தடங்கல்களுக்கு இந்த நிலைமைதான் காரணம். குறைந்த அளவு பொருளாதார வளர்ச்சி, பல குடும்பங்களின் வரையறைக்குட்பட்ட வசதி, தேசிய மூலப்பொருள்கள் இல்லாதது, பரவலாக மக்கள் வாழ்வது, தொழில் கல்விபெற விருப்பமின்மை போன்றவை.

ஈரானிலிருந்து இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் வரை பரந்து கிடக்கும் தெற்கு, தென்கிழக்கு ஆசியாவில் ஜன நெருக்கம் மிக அதிகமாக உள்ள இடங்களும், மிகக்குறைவாகவுள்ள இடங்களும் இருக்கின்றன. உலக மக்கள் தொகையில் கால்பங்கு இங்கு வாழ்கின்றனர். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மட்டும் 56.5 கோடி. இந்தியாவில் மட்டும் ஆண்டுதோறும் 120 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய பள்ளிகளையும் ஆசிரியர்களையும் விரைவில் தேடியாக வேண்டும்.

உலகின் இப்பகுதியில் 1950-ல் 540 லட்சம் குழந்தைகள் பள்ளி சென்றனர். 1960-ல் இது 920. லட்சமாயிற்று. இருந்தும் பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகளின் எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவுதான். மலேசியாவில் . குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது 90% இலங்கையில் 75% வியட்நாமில் 50% இந்தோனேஷியாவில் 45% இந்தியாவில் 40% ஈரானில் 35% பாகிஸ்தானில் 25% நேபாளத்தில் 15% ஆப்கானிஸ்தானத்தில் 7%. இந்தியா, பாகிஸ்தான் பள்ளிகளில் பெண்களைப் போல மூன்று பங்கு ஆண்கள் படிக்கின்றனர்.

1960-ல் கராச்சியில் கூடி இந்நாடுகள் யாவும் கராச்சி திட்டம் என்ற ஒன்றை ஏற்றுக்கொண்டன. (2) 1980 க்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் குறைந்தபட்சமாக ஏழாண்டு இலவசக் கட்டாயக் கல்வியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆசிரியர்கள் தொகை மூன்று மடங்காகும். ஒரு குழந்தைக்கான கல்விச் செலவு ஆண்டுக்கு 8 முதல் 20 டாலர் வரை ஆகும். (வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் செலவிடப்படும் தொகையில் இது கால்பங்குதான்)

கராச்சித் திட்டம் வெற்றி பெறுவதற்கு வேண்டிய ஆசிரியர்களைப் பெறுவதற்கு நடுத்தர, உயர்தரக் கல்வியையும் பெருமளவு விஸ்தரித்தாகவேண்டும். பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவைப்படும் பயிற்சிபெற்ற தேர்ந்த நபர்களையும் தயாரிக்க வேண்டும். கல்வி முறையில் தீவிர மாற்றமும் செய்ய வேண்டியுள்ளது. இன்று தெற்கு, தென்கிழக்காசியாவிலுள்ள ஒரு கோடி மாணவர்கள் பொதுக் கல்வி கற்கிறார்கள். ஆனால் 10 லட்சம் பேர் தான் தொழில் கல்வி கற்கிறார்கள். இந்

(1) ஆரம்பக் கல்வி என்பது 6 முதல் 12 வயது வரை அளிக்கப்படும் கல்வி. நடுத்தர கல்வி 12 முதல் 19 வயது வரை அளிக்கப்படும் பொது அல்லது தொழிற் கல்வி 19 முதல் 25 வயது வரை கல்லூரிகளில் கற்றுத் தரப்படுவது உயர்தரக் கல்வி என்று இங்கு கருதப்படுகிறது.

(2) யுனெஸ்கோ பொது மாநாடு இவ்வாண்டு ஏகமனதாக ஒரு நடைமுறை மரபையும், கல்வி,பாகுபாடு பற்றிய சிபாரிசையும் ஏற்றுக் கொண்டது. இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அடிப்படையில் கல்வித் துறையிலுள்ள எல்லாப் பாகுபாடுகளையும் அகற்றி எல்லோர்க்கும் கல்வி பெற சம வாய்ப்பளிப்பது இதன் நோக்கமாகும்.

| 1965ல் லத்தீன் அமெரிக்கா | பள்ளியில் சேரும் விகிதம் | ஆண்டு தோறும் அதிகரிப்பு |
|---|---|---|
| உயர்தரக் கல்வி | 3 % | 6 % |
| நடுத்தரக் கல்வி | 18 % | 13 % |
| ஆரம்பக் கல்வி | 80 % | 45 %. |



Photo © Pierre Allard

# அறிவுக்கு உரைகல்

பெரு நாட்டின் ஆண்டிஸ் மலைமேல் 11500 அடி உயரத் தில் க்யூரோ இந்தியர் எனப் படும் குடிகள் வாழ்கின்றனர் பெரும் சிரமத்துடன் 250 பே இங்கு வாழ்கின்றனர் உருளைக் கிழங்கு, சோளம் லாமா ஆட்டின் கொழுப் ஆகியவை தான் அவர்கள் உணவு. தங்கள் குழந்தை களுக்கு கல்வியளிக்க இவ கள் ஒரு பள்ளியைக் கட்டி யுள்ளனர். கட்டிடத்துக்கு பெருங்கல்லை ஒருவர் எடுத்து செல்வதை இங்கே காண் கிறோம்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்







## அறிவுக்கு உரைகல்

(17ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்திலுள்ள உடல் வலுவுள்ள ஆண்கள் எல்லோரும் பந்தல் கட்டவும் (மேலே வலது) கூரை வேயவும் (மேலே இடது) உதவுகின்றனர். பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் (இடது) உன்னிப்பாகப் பாடம் கேட்கிறார்கள். பெரு சர்க்காரால் வெகு தூரத்திலுள்ள லிமா விலிருந்து அனுப்பப்பட்டுள்ள ஆசிரியர் ஆண்டில் ஒன்பது மாதம் இங்கு வசிக்கிறார். இது ஒரு கட்டுப்பாடுள்ள ஜனநாயக சமுதாயம். (வலது) வழக்கமான உடையில் கிராமத்தார்கள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடியிருக்கிறார்கள்.

Photos © Pierre Allard







Photo Rapho © Dr Georg Gerster

சமுதாயத்தின் கலாசார வாழ்வில் சுதந்திரமாகப் பங்கு கொள்ளவும் கலைகளை அனுபவிக்கவும் விஞ்ஞான வளர்ச்சியிலும் அதன் நன்மைகளிலும் பங்கு கொள்ளவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

மனித உரிமைப் பிரகடனம் 27 வது பிரிவு.

## மக்கள் தொகைப் பெருக்கத்தை கல்வி வளர்ச்சி மிஞ்ச முடியுமா?

திய சர்வகலாசாலைகளிலிருந்து ஆண்டு தோறும் 1,16,000 கலைப்பட்டதாரிகளும் 25,000 சட்டப்பட்டதாரிகளும் வெளிவருகிறார்கள். ஆனால் விஞ்ஞானத்தில் 8,000 பேரும் பொறியியலில் 5000 பேரும் விவசாயத்தில் 4,000 பேரும் தான் பட்டம் பெறுகிறார்கள்.

கராச்சி திட்டம் நல்ல லட்சியங்களைக் கொண்டது. ஆனால் மக்கள் பெருக்கத்துக்கிணங்க கல்வியைப் பெருக்குவது இப்பிராந்தியத்தில் கஷ்டமாக இருக்கும். திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்படவில்லை. 1960க்கும் 1965க்குமிடையே பள்ளியில் குழந்தைகளை சேர்ப்பது 3 கோடியாக உயர்ந்தது. இந்தியாவில் 80% வியட்நாமில் 67% ஈரானில் 42% ஆப்கானிஸ்தானத்தில் 14% ஆக அதிகரித்துள்ளது.

கிராமப் பகுதிகளில் பெண்களுக்குக் கல்வி வாய்ப்பு எளிதில் கிட்டும்படி செய்வதற்கும் தொழிற்கல்வியளிக்கவும் விசேஷ முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் கட்டிடங்களுக்கும் பாடப்புத்தகங்களுக்கும் வேண்டிய அளவு நிதி வசதி இல்லை.

1965க்கும் 1970க்குமிடையே ஆரம்பப் பள்ளிகளில் 4 கோடி குழந்தைகளுக்கும், நடுத்தரப்பள்ளிகளில் 1.2 கோடிப் பேருக்கும் கல்லூரிகளில் 10 லட்சம் பேருக்கும் இடம் கண்டுபிடித்தாகவேண்டும். மேற்கொண்டு 11,54,000 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் 2,50,000 நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களும் தேவைப்படுவார்கள். இந்த எண்ணிக்கையிலிருந்தே பிரச்னை எவ்வளவு பெரியது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

| அரபுநாடுகளில் அபிவிருத்தி | 1960 | 1966 | ஆண்டுக்கு அதிகரிப்பு |
|---|---|---|---|
| உயர்தரக் கல்வி | 145,000 | 250,000 | 14 % |
| தொழிற்கல்வி ............ | 187,000 | 237,000 | 7 % |
| நடுத்தர பொதுக்கல்வி ... | 920,000 | 1630,000 | 12 % |
| ஆரம்பக்கல்வி ......... | 6,300,000 | 9,700,000 | 9 % |

அரபுநாடுகளில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1960-க்கும் 1966க்குமிடையே மக்கள் தொகை 9.2 கோடியிலிருந்து 10.5 கோடியாக உயர்ந்தது. பள்ளிகள், கல்லூரிகளில் படிப்போர் தொகை 80 லட்சத்திலிருந்து 120 லட்சமாக உயர்ந்தது. ஆண்டு தோறும் மக்கள் தொகை அதிகரிப்பு 2.5% கல்விபெறுவோர் தொகை அதிகரிப்பு 10%.

ஆயினும் 80 லட்சம் குழந்தைகள் இன்னும் பள்ளியில் சேர்க்கப் படாமலிருக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரபு நாடுகளில் இளவயதினர் நிறைய இருக்கிறார்கள். மக்கள் தொகையில் 20 வயதுக்குட்பட்டவர்கள் 50%. 5 முதல் 11 வயதுக்குட்பட்டவர்கள் 17%. ஐரோப்பிய நாடுகளில் இது முறையே 30%ம் 11%ம் ஆகும்.

இப்பகுதி முழுவதும் கல்வி வளர்ச்சி சீராக இல்லை. நகரக் குழந்தைகளை விட நாட்டுப்புறக் குழந்தைகளுக்கு வசதி குறைவு. வகுப்பில் பெண்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர். (ஆரம்பப்பள்ளிகளில் 3க்கு 1, நடுத்தரப் பள்ளிகளில் 4க்கு 1, உயர்தரக் கல்விக்கூடங்களில் 5க்கு 1) பாதக நிலையிலுள்ள குழந்தைகளுக்கு விசேஷ ஏற்பாடு எதுவும் இல்லை. சாதாரணப்

பள்ளிகளில் சேர்ந்து படிக்கிறார்கள் அல்லது படிக்காமலே இருந்து விடுகிறார்கள். நடுத்தரப் பள்ளிகளில் தொழிற்கல்வி வகுப்புக்கள் வெகு குறைவாகவே உள்ளன. போதிய கட்டிடங்களும், சாதனங்களும், ஆசிரியர்களும் இல்லாததால் கல்வி பொதுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதர நாடுகளிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து ஓரளவு சமாளிக்கப்படுகிறது.

அரபு நாடுகளுக்கு விவசாயமும், எண்ணெயும்தான் முக்கிய வருவாய் இனங்கள். நிலச்சீர்திருத்தம், விவசாய முறை அபிவிருத்தி, புதிய சாதன வளர்ச்சி, குறிப்பாக தொழில் வளர்ச்சி ஆகியவை இளைஞர்கள் எல்லாக் கட்டத்திலும் பெறும் கல்வியைப் பொறுத்ததாகும். குழந்தைகள் கல்வி வளர்ச்சியில் கல்வி கற்ற பெண்கள்தான் முக்கிய பங்கு வகிக்க முடியும். இதர இடங்களில் போலவே இங்கும் தனி நபரின் தகுதிதான் பொருளாதார வளர்ச்சிக்கு இயக்கும் சக்தியாக உள்ளது.

1960-ல் சர்வதேச அரங்குக்கு வந்த பிறகு ஆப்பிரிக்காவின் பெரும் பகுதி இன்று சுதந்திரமாக உள்ளது. 1960-ம் ஆண்டு உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்தது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் கல்வித்துறையில் பெரும் பொறுப்புகளை எதிர்நோக்கின. ஆப்பிரிக்க நாடுகளில் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பது சராசரி 16% ஆக இருந்தது. 2%லிருந்து 60% வரை ஒவ்வொரு நாட்டிலும் ஒருவிதமாக இது இருந்தது. பெரும்பாலான நாடுகளில் 5ல் 4 குழந்தைகள் பள்ளியில் சேரவில்லை. பெண்கள் ஆரம்பப் பள்ளிகளில் 30%ம் நடுத்தரப் பள்ளிகளில் 22% ம் தான் இருந்தனர். சில நாடுகளில் 10-ல் 1 பெண் கூடப் பள்ளி செல்லவில்லை.

1960-ல் காமரூன் ஆரம்பக் கல்வித் துறையில் முன்னணியில் இருந்தது. கடலோர நாடுகள் வடக்கேயுள்ள நாடுகளைவிட உறுதியாக அமைந்த கல்வியமைப்பைக் கொண்டிருந்தன. மாலி நாட்டில் 600 பேருக்கு இடமுள்ள ஒரு தொழிற் கல்லூரி மட்டுமே இருந்தது. இதிலிருந்து பயிற்சி பெற்று வெற்றியடையும் வெகு சிலர்தான் 45 லட்சம் மக்களையும் 12 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பையும் கொண்ட நாட்டில் பொறுப்பான பதவிகளை ஏற்கக் கூடியவர்கள்.

1961-ல் அடிஸ் அபாபாவில் நடைபெற்ற ஆப்பிரிக்க நாடுகளின் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் அடுத்த இருபது ஆண்டுகளில் பின் வரும் இலக்குகளையடைவதென முடிவெடுக்கப்பட்டது.

* ஆறுண்டு இலவச, கட்டாய, ஆரம்பக் கல்வி.

* மூன்றுண்டுகள் வீதம் இரு கட்ட நடுத்தரக் கல்வி—இதிலிருந்து 30% ஆரம்பப் பள்ளி மாணவர்கள் பயன் பெறுவர்.

* நடுத்தரப் பள்ளி மாணவர்களில் 20%க்கு உயர்கல்வி, இதன்மூலம் 10ல் 9 மாணவர்கள் வெளி நாடு செல்லாமல் ஆப்பிரிக்காவிலேயே படிக்க வசதி ஏற்படும்.

* கல்விபெற இரு பாலாருக்கும் சம வாய்ப்பு.

அதன் பிறகு வளர்ச்சி விரைவாக ஏற்பட்டுள்ளது. 1960க்கும் 1965க்குமிடையே கல்வி 7 லிருந்து 20% ஆக மாலியிலும் 14லிருந்து 21% ஆக சாத்திலும் 24 லிருந்து 52% ஆக ஸெனிகலிலும் 29லிருந்து 60% ஆக டோகோவிலும் அதிகரித்துள்ளது.

நைஜீரியா தென்பகுதியில் ஆரம்பக் கல்வியை விஸ்தரித்துள்ளது. அல்ஜீரியப் பள்ளிகளில் ஆண்கள் அளவுக்குப் பெண்கள் உள்ளனர். சோமாலியாவில் 3 ஆண்களுக்கு ஒரு பெண் வீதம் படிக்கிறார்கள்.

நடுத்தரக் கல்வித் துறையில் இதை விடப் பெரும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக ஸெனிகலில் ஆரம்பக் கல்வி இருமடங்காகி உள்ளது. நடுத்தரக் கல்வி சுமார் மூன்று மடங்காக ஆகியுள்ளது. 9 ஆயிரத்திலிருந்து 24 ஆயிரம் (தொழிற் பள்ளிகளில் இதுவரை 2500 தான்).

வளர்ந்து வரும் எல்லா நாடுகளுமே ஒரே பிரச்னையைத்தான் எதிர்நோக்குகின்றன என்பதைப் பார்த்தோம். கட்டாய ஆரம்பக் கல்வி எங்கும் புகுத்தப் பட்டு வருகிறது. நடுத்தரக் கல்விக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு தொழிற் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன.

இந்த இலக்குகளை அடைவதற்கு 1965க்கும் 1970க்குமிடையே ஆரம்பப் பள்ளிகளில் மேலும் 502 கோடி குழந்தைகளையும் நடுத்தரப் பள்ளிகளில் 105 கோடிப் பேரையும் கல்லூரிகளில் 15 லட்சம் மாணவர்களையும் சேர்த்தாக வேண்டும். 25 லட்சம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் 10 லட்சம் நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி தரவேண்டும்.

மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு இணையாக கல்வி வளர்ச்சி ஏற்பட எங்கெங்கும் போராட்டம் இருந்து வருகிறது. போதிய நிதி, போதிய ஆசிரியர்கள் இல்லாத இரு தடைகள் வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கின்றன. சில நாடுகள் தங்கள் வருவாய் முழுவதையும் கல்விக்காக செலவிட்டாலும் கூட எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி அளிக்க முடியாத நிலையில் உள்ளன.

பல நாடுகள் வெளியிடங்களிருந்து ஆசிரியர்களை வரவழைக்க வேண்டிய நிலையில் உள்ளன. மாலி நாட்டில் பிரான்ஸ், சோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்கா, கானடா, அரபுக் குடியரசு, இஸ்ரேல், வியட்நாம், ஆகிய இடங்களிலிருந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மொரோக்கோவின் 27,000 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களில் 1700 பேரும் 7120 நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களில் 4340 பேரும், உயர்தரக் கல்வி ஆசிரியர்கள் 450 பேரில் 279 பேரும் இதர நாடுகளிலிருந்து வந்தவர்கள். ஸெனிகலில் 9% ஆசிரியர்கள்தான் அந்நாட்டினர். உகண்டா, கென்யா, சோமாலியா, கம்போடியா ஆகிய நாடுகளிலும் நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களில் பெரும் பகுதி வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள்.

வளர்ந்துவரும் நாடுகளுக்கு தங்கள் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற சர்வதேச உதவியும் தொழில் நுணுக்க ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன. தங்கள் சொந்த முயற்சியின் மூலமும் சர்வதேச உதவியுடனும் வளர்ந்து வரும் நாடுகள் இருபதாம் நூற்றுண்டின் முடிவுக்குள் ஒரு நல்ல கல்வியமைப்பை ஏற்படுத்திவிட முடியுமென நம்புகின்றன.

## பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்ற நாடுகள்

கல்வி பெற வேண்டியவர்கள் தொகை பெருகி வரும் பிரச்னையைச் சமாளிக்க, வளர்ச்சி பெற்றுள்ள நாடுகள் முயன்று கொண்டிருக்கும் தருணத்தில் வளர்ந்து வரும் நாடுகள் நிதியுதவியும் நிபுணர் உதவியும் கேட்பது பளுவாக உள்ளது.

முறையான கல்வி அமைப்பும் போதனை வசதிகளும் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன. ஆயினும் பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகள் ஏராளமாகப் பெருகியிருப்பது அவற்றின் கல்வியமைப்பை ஆட்டங்காணச் செய்துவிட்டன. இந்நாடுகளில் ஒரு கல்விப் புரட்சியே நடந்துகொண்டிருக்கிறது.

* பிறப்பு விகிதம் அதிகரித்ததற்கேற்ப ஆரம்பப் பள்ளியில் சேர்ப்பது அதிகரித்துள்ளது.

* நடுத்தரப் பள்ளியில் சேர்ப்பது எல்லா இடங்களிலும் கணிசமாக அதிகரித்துள்ளது. பிறப்பு விகித உயர்வு, பள்ளியிலிருந்து வெளியேறும் வயதை 15 ஆக உயர்த்தியது, படிப்பை விஸ்தரித்தது ஆகிய மூன்று காரணங்களின் ஒட்டுமொத்த விளைவு இது. (பக்கம் 31 அட்டவணை காண்க).

எல்லாக் குழந்தைகளும் ஆரம்பப் பள்ளியிலிருந்து நடுத்தரக் கல்வியின் முதல் கட்டத்துக்குச் செல்வது இப்போது சகஜமான நிகழ்ச்சியாகிவிட்டது. நடுத்தரக் கல்வி தரும் வசதியும் விருப்பமும் பெற்றோர்களிடம் அதிகரித்துள்ளது.

* உயர்தரக் கல்வியும் மாறும் கட்டத்தில் உள்ளது. நடுத்தரப் பள்ளிகளிலிருந்து ஏராளமான பேர் கல்லூரிகளுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானமும் தொழில்நுணுக்கமும் ஆதிக்கம் செலுத்தும் நவீன சமூகத்தில் பல முக்கிய பதவிகளுக்கும் இந்த இரண்டின் அறிவும் அவசியமாகவுள்ளது. பெண்கள் மேலும் மேலும் கல்லூரிகளுக்கு வருகிறார்கள். விஞ்ஞானம், சட்டம், மருத்துவப் படிப்பில் ஆண்கள் அதிகமாக இருந்த போதிலும் கலைப் பிரிவில் பெண்கள் அதிகமாக உள்ளனர். சில நாடுகளில் வெளியிடங்களிலிருந்து படிக்க வருவோர் தொகை பெருகியுள்ளது. 1964ல் இங்கிலாந்தில் வெளி நாட்டு மாணவர்கள் 15,000 பேரும் பிரான்சில் 35,600 பேரும் சோவியத் யூனியனில் 21,000 பேரும் அமெரிக்காவில் 82,000 பேரும் இருந்தனர்.

(31ம் பக்கம் பார்க்கவும்)

**இன வேறுபாடு இல்லாமல்**

இந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள எல்லா உரிமைகளும் சுதந்திரங்களும் இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், சமூகம், சொத்து, பிறப்பு போன்ற எவ்விதப் பாகுபாடும் இன்றி ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

உரிமைப் பிரகடனம்
2வது பிரிவு



# எங்கும் நிறைந்துள்ள இனவெறியின் நிழல்

**ஜான் ரெக்ஸ்**

இரண்டாவது உலக யுத்தத்தில் நாஜிகளும், அவர்களது கூட்டாளிகளும் தோற்கடிக்கப்பட்டனர். 1945-ல் ஐ. நா. ஸ்தாபனம் தோன்றியது. எனினும் இன்றைய உலகில் இனவெறி தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறது. தமது தோலின் நிறம் காரணமாக வேலைவாய்ப்பு, இடவசதி, கல்விக்கான சந்தர்ப்பங்கள் முதலியவை மக்களுக்கு மறுக்கப்படுகின்றன. பசிப்பிணி வாட்டுகின்ற ஏழை நாடுகளிலிருந்து மக்கள் வந்து குடியேறாமல் இருப்பதற்காக, தமது குடியேற்றச் சட்டங்களை இன அடிப்படையில் சில பணக்கார நாடுகள் நிறைவேற்றி வைத்துக் கொண்டிருக்கின்றன. எல்லா இனத்தவருக்கும் ராஜீய உரிமைகள் சமமாக அளிக்கப்பட வேண்டுமென்று கோரும் தலைவர்களுக்கு

---

**ஜான் ரெக்ஸ்** இங்கிலாந்திலுள்ள டர்ஹாம் பல்கலைக் கழகத்தில் சமூக தத்துவப் பேராசிரியர். இனப் பிரச்னை குறித்துப் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வருபவர். இத்துறையில் பல நூல்களையும் எழுதியிருக்கிறார்.



Photo © Hallwag-Marianne Sin-Pfältzer : from "Fred und Peter", Ed. Hallwag, Berne and Stuttgart. 1966

அவற்றில் சிறைத்தண்டனை கிடைக்கிறது. பணக்கார மேலைநாடுகளின் நகரங்களில்கூட நீக்ரோக்கள் வசிக்கும் சேரிகள் கொளுத்தப்படுகின்றன. அவற்றில் வசிப்போர் தொல்லைக்குள்ளாகின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் அமுலாகி வருகின்ற இன ஒதுக்கல் முறைதான் இன்றைய உலகில் இன மனப்பான்பான்மைக்கு எடுப்பானதோர் உதாரணமாக இருந்து வருகிறது. எல்லா இனத்தவருக்கும் தேசத்தவருக்கும் சம அளவில் வசதி வாய்ப்புக்களைத் தனித்தனியாக அமைப்பதற்கான தீவிர முயற்சியே இது என்று சிலர் கற்பனை செய்துகொண்டிருக்கலாம். ஆனால் நடைமுறையில் வெள்ளைத் தோல் படைத்தவர்கள் தமது நன்மைக்காகவும், கறுப்பு இனத்தவருக்கும் கலப்பு நிறத்தவருக்கும் பிரதிகூலமாகவும் இன ஒதுக்கல் கோட்பாடுகளை நடத்தி வருகிறார்கள்.

வெவ்வேறு இனத்தவர் தனித்தனிப் பகுதிகளில் வாழவேண்டுமென்று இருந்துவரும் ஏற்பாட்டில் மட்டும் இன ஒதுக்கல் தீமை இருக்கவில்லை. வெள்ளையரல்லாதவருக்குத் தரப்படும் பகுதிகள் ஜனநெரிசல் அதிகம் உள்ளவையாகவும், வளமையில்லாதவையாகவும் இருப்பதைக் காண்கின்றோம். அங்கே வசித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளவர்கள், வெள்ளைக்காரர் வசிக்கும் பகுதிகளுக்கு வேலைக்காகச் சென்றுவரக் கூடிய உரிமை பெற்றவர்களாக இருந்தாலொழிய, பட்டினியால் தவிக்க வேண்டியதுதான். எனவே, இன ஒதுக்கல் கொள்கை நடைமுறையில் என்ன ஆகிறது? இப்போதுபோல் ராஜீய அதிகாரம் வெள்ளையரிடம் இருக்கும்வரையில் கறுப்பர்கள் வெள்ளையர்களுக்காக வேலை செய்தாக வேண்டுமென்பதுதான் அதன் பொருள்.

ஆயுதபலத்தால் அடைந்த வெற்றியும், அப்படி வெற்றி கொண்டவர்கள் ஏகபோகமாக அதிகாரத்தைச் செலுத்தி வருவதும்தான் இத்தகைய நிலவரத்துக்குக் காரணமாயின. அங்கேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் வெள்ளையர்களால் சிருஷ்டிக்கப்பட்டவை. ஆனால் நிற வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி ஏற்றத் தாழ்வுகள் இயற்கையாக ஏற்பட்டவையென்பதை அவை புலப்படுத்துவதாக, ஜெயித்தவர்கள் கூறுகிறார்கள். உடல் அமைப்பிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக அப்படி நிகழ்ந்துள்ளது அல்லது அது கடவுளின் திருவுள்ளம் என்று கூடச் சொல்கிறார்கள்.

இத்தகைய ராஜீயமுறை காலனி ஆதிக்கம் இருந்த பல பிரதேசங்களில் வேரூன்றிவிட்டிருக்கும். ஆனால் 1945-ல் நேச நாடுகள் அடைந்த வெற்றியையடுத்து, காலனிகளாக இருந்தவை விடுதலை பெற்றதன் காரணமாக நிலைமை மாறியது. இந்த விடுதலைக்கு ஐ. நா. ஸ்தாபனம் துணைபுரிந்தது. பல தேசங்களில் எல்லோருக்கும் சம வாய்ப்புக்கள் கிடைக்கச் செய்வதில் வெற்றி கிட்டியது.

ஆனால் வெள்ளையரின் ஆதிக்கமும் இனமண்டலக் கோட்பாடும் இருக்கின்ற தேசங்களில் வெள்ளையர் அல்லாதார் மட்டமானதோர் நிலைமையை ஏற்றுக்கொண்டாக வேண்டும்; இல்லாவிடில் வாழ்நாள் நெடுக ஏதோ ஒரு தீவில் சிறைப்பட்டிருக்க வேண்டும். வெவ்வேறு இனங்களிடையே ராஜீய உரிமைகள் சம அளவில் இருக்கலா



## மனித கௌரவத்துக்கு உள்ள உரிமை

சமூக உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவருக்கும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுண்டு. தேசிய முயற்சி, சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் அவனுடைய கௌரவத்துக்கும், ஆளுமை சுதந்திரமாக வளர்ச்சி பெறுவதற்கும் இன்றியமையாத பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் அவனுக்கு உண்டு.

உரிமைப்பிரகடனம் 22வது பிரிவு

Photo © Rapho-Janine Niépce

# பாகுபாட்டைப் போக்குவது இனக்கொள்கையைத் தகர்க்க முதல் வெடி

காது என்ற கோட்பாட்டின்பேரில் ராஜீயத் தலைவர்கள் தமது சர்க்கார்களை அமைத்துள்ள தேசங்களின் எதிர்காலமும் அத்தகையதாகவே இருந்துவரும்.

இன் மனப்பான்மையும் சமூக அமைப்பில் அதன் விளைவாக ஏற்படும் மாறுதல்களும் முன்னர் காலனிகளாக இருந்த பிரதேசங்களில் மட்டும்தான் இருக்கின்றன என்பதில்லை. தொழில் துறையில் ஏற்றம் கண்டுள்ள தேசங்களின் வாழ்க்கையிலும் இந்நிலையைக் காணலாம். இனங்களிடையே சமத்துவம் இல்லாமை, அந்த நிலையை ஒழித்துக் கட்டுவதற்காக மக்கள் செய்கின்ற முயற்சி ஆகியவைதாம் பிரதான பிரச்சினைகளாக ஆகிவருகின்றன. மற்ற சம்பிரதாயமான ராஜீயப் பிரச்சினைகள் இதன் விளைவாகப் பின்னடைகின்ற நிலையைக் காண்கிறோம்.

1945ம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் முன் எப்போதும் கண்டிராதவாறு ஒரு பொருளாதார சுபிட்சம் ஏற்பட்டது. ஏழை நாடுகளிலிருந்து அவற்றின் நகரங்களுக்கு மக்கள் வந்து குடியேறினர். அந்தந்தத் தேசங்களிலேயே நாட்டுப் புறங்களிலிருந்தும் அடிமைநிலை இருந்து வந்த பழைய தோட்டப் பகுதிகளிலிருந்தும் அவர்கள் வந்தனர்.

இம்மாதிரி வந்து குடியேறியது ஒரு பெரிய வெள்ளப்பெருக்கு போன்றது, கட்டுத் திட்டம் இல்லாதது, வரையறை செய்ய முடியாதது என்ற நிலை இருக்கவில்லை. வேலைகள் எங்கு கிடைக்கின்றனவோ, அந்த இடங்களுக்குத்தான் அவர்கள் சென்றனர். எனவே, தாமாகவே ஒரு கட்டுத்திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் எனலாம். எனினும் இம்மாதிரி நடைபெறுகின்ற குடியேற்றம், சம்பந்தப்பட்ட நாடுகளில் எவ்வாறு கருதப்பட்டது என்பதை விவரிப்போம். வெளியிலிருந்து வந்து குடியேறுவதற்குப் பல இடையூறுகள் போடப்பட்டன. இட வசதி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் சமசந்தர்ப்பம் தரப்படுவதில்லை.

இத்தகைய வில்லங்கங்கள் இன அடிப்படையில் சிருஷ்டிக்கப்படுவதாக வெளிக்குத் தோன்றமாட்டா. புதிதாக வருகின்ற எல்லோரையுமே அவை கட்டுப்படுத்துகின்றன என்று விதிகளில் கூறலாம். ஆனால் இவற்றால் அதிகமாக பாதிக்கப்படக்கூடியவர்கள் வெள்ளையரல்லாதார் தாம். நிறம், இனம் என்ற அடிப்படைகளில்தான் பாகுபாடுகள் செய்யப்படுகின்றன.

வெள்ளையரல்லாதார் நெரிசல் மிகுந்த இடங்ககளில் ஒதுங்கி வாழ வேண்டியிருக்கிறது அல்லது வறுமை மிகுந்த உள்நாட்டினர் வசிக்கும் பகுதிகளில் ஒதுங்க வேண்டியிருக்கிறது. வேலை வாய்ப்பில் சமத்துவம் மறுக்கப்படுகிறது. இதன் காரணமாக வெள்ளையரல்லாதாரிடையே வேலையில்லாமையின் விகிதாசாரம் மொத்தத்தில் அதிகமாக இருப்பதைக் காணலாம். வரவர தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் அபிவிருத்தியின் காரணமாக நல்ல வேலைகளைப் பெறுவோருக்கு நல்ல இடவசதி கிடைக்கிறது, நல்ல ஊதியமும் கிடைக்கிறது. மற்றவர்கள் நிலை மாறுபட்டிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பங்களில் ஓட் அளிப்பதற்குள்ள உரிமையின் மூலமாகப் போராடி நியாயத்தையும் சமத்துவத்தையும் பெற வேண்டிய நிலையில் பெரும்பாலோர் இருக்கிறார்கள். ஆனால் சிறுபான்மையினருடைய பிரச்சினை அதிகச் சிரமம் வாய்ந்தது. அவர்கள் கோர்ட்டுகளை அணுகலாம், சில சமயம் அவற்றின் மூலம் வெற்றி கிடைப்பதுண்டு. ஆனால் சட்டத்தின் பாதுகாப்பு போதுமானதாக அல்லது துரிதமானதாக இல்லாத நிலைமையில், குறைகளுக்குப் பரிகாரம் கிடைப்பதில்லை. எனவே, கலகம், சட்டவிரோதமான நடத்தை, சட்டமறுப்பு ஆகியவை தவிர வேறு வழியில்லையென்றே ஏற்படுகிறது.

ஐரோப்பிய சரித்திரத்தில் எடுப்பாக இருப்பவை ராஜீய மாறுதல்களே. வர்க்கங்களிடையே நடைபெற்ற போராட்டங்களை அது மையமாகக் கொண்டது. காலனிகளின் நிலைமையைக் காணும் ஐரோப்பியர்கள், தங்கள் கதையே அங்கும் நடந்தேறுவதாகக் கருதலாயினர்.

ஆனால் இந்த வியாக்கியானங்களைக் காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட மக்கள் நிராகரித்தனர். வெள்ளையரல்லாதாரும் அதை ஏற்கவில்லை. பாகுபாடும் சமத்துவமற்ற நிலையும், பணிகளில் ஈடுபட்டிருக்கும் வர்க்கங்களில் அவ்வளவாக இல்லை. ஆனால் காலனிகளிலிருந்து

வந்தவர்களும் வெள்ளையரல்லாதாருமான ஊழியர்களின் அனுபவந்தான் அவ்வாறு இருக்கிறது.

தமது பிரச்சினைகள் இன அடிப்படை உள்ளவை அல்லவென்ற விளக்கத்தை ஏற்பதற்கு அவர்கள் முன்போல் அவ்வளவு தயாராக இல்லை. சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தினருடன் தாமும் இணைய வேண்டுமென்ற கோரிக்கைக்கும் அவர்கள் அவ்வளவு இசைவாக இல்லை. ஐரோப்பாவில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றிய தத்துவங்களை அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். அங்கு சமத்துவநிலை ஏற்றம் கண்டு வருவது, மக்களின் க்ஷேமநலம் தொழிலாள வர்க்கத்தின் செய்முறைகள் மூலம் கைகூடுவது, வெள்ளையரல்லாதார் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற தங்கள் சொந்த ஆற்றலிலுள்ள நம்பிக்கை, காலனிகளில் புரட்சி ஏற்பட வேண்டுமென்ற தத்துவங்கள் முதலியவை அவர்களை அதிகமாக ஈர்க்கின்றன.

இப்போது உலகில் ஏற்பட்டு வருகின்ற பாகுபாடுகளை சமீப காலத்தில் பல எழுத்தாளர்கள் பின்வருமாறு மதிப்பிடுகின்றனர். ''புதிய பிரிவினைகள் தோன்றி வருகின்றன. புதிய கூட்டுறவுகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தேசிய சமுதாயத்திற்குள்ளேயும் எவ்வாறு நிகழ்ச்சிகள் உருப்பெறக் கூடும் என்று 19-வது நூற்றாண்டில் மார்க்ஸ் கருதினாரோ, அதுவே இப்போது விரிவாக உலகெங்கும் காணப்படுகிறது. அதாவது மக்கள், எங்கும் ஒன்றுடன் ஒன்று போர் செய்கின்ற இரண்டு பெரிய முகாம்களாகப் பிரிந்து கிடக்கின்றனர்.'' இந்த முகாம்கள் அவர் கண்டது போன்ற சமூக, பொருளாதார அடிப்படையிலுள்ள வர்க்கங்கள் அல்ல. நம்மை எதிர்நோக்கியுள்ள போராட்டம் இனப்போராகவே உருவாகக் கூடும் என்ற அச்சுறுத்தலைக் காண்கிறோம். பேராபத்தை நோக்கி விரைந்து செல்கின்ற இன்றையப் போட்டியில், இனத் தத்துவங்களை எதிர்ப்போர் அதை வேரிலேயே வெட்டியெறிய முற்படவேண்டும். அது பொய்யானது என்பதை வெளிப்படுத்த வேண்டும். அதிலுள்ள முரண்பாடுகளைக் காண்பிக்க வேண்டும். ஆனால் இவை மட்டும் போதுமானவையாகமாட்டா. பாகுபாட்டிற்கு எதிராக மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். இனத் தத்துவம் தவறான நம்பிக்கைகளில் கொண்டு போய்விடுகின்ற உளவியல் காரணங்களையும், சமூகக் காரணங்களையும் தெளிந்தறிய வேண்டும். அவற்றைப் பலர் நம்புவதால் இது அவசியமாகிறது. சமூக விஞ்ஞானிகளும், ஐ. நா. வின் விசேஷ ஸ்தாபனங்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும். இன அடிப்படையிலுள்ள தத்துவங்களுக்கு விஞ்ஞான ரீதியான ஆதரவு எதுவும் இல்லையென்று 1964-ல் மாஸ்கோவில் யுனெஸ்கோ ஆதரவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உடற்கூறு வல்லுனர்கள் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்கள். அவர்களிடையே கருத்தொற்றுமை இருந்தது. இன்றைய உலகில் நாம் காண்கின்ற சமத்துவமற்ற நிலைகள், மக்களது வெவ்வேறு விதமான பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. மக்கள் சமத்துவமற்ற நிலையில் பிறந்தனர் என்ற காரணத்தால் அவர்கள் சமத்துவமற்றவர்களாகி விடுவதில்லை. எனவே, இப்போதைய ஏற்றத்தாழ்வுகளில் நீதிக்கும் அநீதிக்குமான காரணங்கள் விஷயத்தில் முடிவு கண்டுவிட்டதாகச் சொல்ல முடியாது.

இனத் தத்துவத்திற்கு எதிரிடையாக மாஸ்கோ அறிக்கையில் உடற்கூறு வல்லுநர்கள் கூறியதைத் திறம்படப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இனப் பாகுபாட்டுக்கு உடற்கூறு காரணமாக இருக்க இயலாது என்பதை எல்லா வகைகளிலும் எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டு விளக்க வேண்டும். இதற்கு நேரெதிரிடையான வாதங்களுக்கும் அவை பயன்படலாம் என்பதை மறப்பதற்கில்லை. கல்வியின் மூலமாக சீர்திருத்தத்தைச் செய்ய முற்படுவோருக்கு எல்லாம் இதிலும் சந்தேகம் எழத்தான் செய்யும். கல்விமான்களுக்கே நாம் கல்வி புகட்ட வேண்டியிருக்கிறது. யுனெஸ்கோ தன்னால் இயன்றதைச் செய்து, பள்ளிக் கூடங்கள் மூலமாகவும் மற்ற பிரசார சாதனங்களின் மூலமாகவும் மக்களுக்கு இவ்விஷயத்தில் அறிவு புகட்ட வேண்டிய அவசியம் உண்டு.

நியாயத்தைப் பெறவும் இன அடிப்படையில் செயலாற்றுவதை அகற்றவும் பாடுபடுகிறவர்கள் மக்கள் சமூகம் அனைத்தும் கல்வி பெறட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று வாளாவிருக்க முடியாது. உலகெங்கும் மக்களின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படுவதற்காகவும் அது காத்திராது. உலகம் அனைத்திலும் மனமாறுதல் ஏற்பட்டால்தான் இனத் தத்துவங்களுக்கு முடிவு கட்ட இயலும் என்ற வாதத்தைச் சுட்டிக்காட்ட, அவை தொடர்ந்து அமுலாவதற்கு நியாயம் கூறுவோர் இருக்கிறார்கள். நல்வாழ்க்கைக்கான சமவாய்ப்புக்கள் மக்களுக்கு மறுக்கப்படும் வரை, இனத் தத்துவத்தை உண்மையில் எதிர்க்கின்ற சர்க்கார் எதுவாக இருந்தாலும் சரி, அது தன் அதிகாரத்தை உபயோகிக்காது; இனப் பாகுபாட்டை எல்லா வகைகளிலும் தடுத்து அதை அனுஷ்டிப்போருக்குத் தண்டனை விதித்தாகவேண்டும்.

சட்டம் இயற்றி, இனப் பாகுபாட்டை அடியோடு ஒழித்துவிட முடியும் என்று அனுபவமுள்ள எவரும் கற்பனை செய்துவிட மாட்டார். சட்டத்தில் என்னென்ன பொத்தல்கள் இருக்கின்றன என்பதை இனத் தத்துவவாதி கண்டுகொள்வார். வெளித்தோற்றத்தில் இன அடிப்படை இல்லாமல் தமது உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவர் முயல்வார். உரிமை மறுக்கப்படுவோருக்குப் படிப்பு இல்லை; அல்லது கலாசாரத் தகுதி போதாது, எனவே ஏற்பதற்கில்லை என்று எல்லாம் கூறுவார்கள். எனினும், இவ்விஷயத்தில் சட்டம் இயற்றுவதே கல்வி புகட்டுவது போலாகும்.

சட்டம் பயனளிக்கத் தவறுகின்ற நிலவரத்தில்தான் நகர்ப்புறங்களில் வசிப்போரும், உரிமை மறுக்கப்பட்டோரும், தாழ்நிலையில் இருப்போரும் சட்டத்தை மீறி நடக்க முற்படுகிறார்கள். கலகங்கள் எழுகின்றன. வெள்ளையரல்லாதாரின் ஆதிக்கம் ஏற்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் கிளம்புகின்றன. தன் பொறுப்புக்களை நிறைவேற்றி வைக்கச் சட்டம் தவறிவிட்டது என்பதைத்தான் இவை காட்டுகின்றன. பலாத்காரமும், சட்டம் ஒழுங்கில்லாத நிலைமையும் நிற்கவேண்டுமானால் தனி நபரின் உரிமைகளை உத்தரவாதம் செய்தாக வேண்டும்.

இனத்தத்துவச் செயல்களின் விளைவுகளினின்று மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதன் மூலமாக மட்டும் இனக் கோட்பாட்டை விலக்கிவிட முடியாது. அவற்றிற்குக் காரணமாகவிருந்த சமூக நிலவரங்களை மாற்றியாக வேண்டும். இதை நாம் செய்யத் தவறினோமானால், அது வேறோர் வடிவத்தில் சீறியெழும். என்வே, இந்தப் பிரச்சினையை 'வேரறுக்கும் வகையில் அதற்கு முடிவு கட்டுவதற்குத் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதுதான் இனத் தத்துவ விஷயத்தில் நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

இனத் திமிர் என்பது பிறவிக்குணம் அல்ல. அதற்கு ஆதாரம் இல்லை. ஒவ்வொரு நபரின் மனநிலையையும், தன்மையையுங்கூட அது பொறுத்தது. எனவே, மனோதத்துவ அறிஞர்கள் அவற்றை மாற்றுவதற்குத் துணை புரிய இயலும்.

அமெரிக்க நீக்ரோவைப்பற்றி குன்னார் மிர்டாலின் ஆராய்ச்சி வெளியானது முதல் சமூகவியல் நிபுணர்கள் சில விஷயங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். பாகுபாடு பிரயோகமானவுடனேயே அதற்கு இலக்காகின்றவர் தாழ்வு மனப்பான்மை அடைந்துவிடுகிறார். அத்தகையோரின் இழிநிலையைச் சுட்டிக்காட்டி, இனத் தத்துவத்திற்கு ஆக்கம் தேட விரும்புவோர்களும் உண்டு. பாகுபாட்டையே அடியோடு ஒழிப்பதுதான் இனத் தத்துவத்தை ஒடுக்குவதற்குள்ள வழி. இடவசதி விஷயத்தில் பாகுபாடு செய்வதன் விளைவாக வெள்ளையரல்லாதார் மட்டமான சூழ்நிலைகளில் வாழ வேண்டியிருக்கிறது. அவர்கள் அப்படி மட்டமான நிலையில் இருக்கிறார்களே என்பதைக் காரணமாகக் காட்டி, இன்னும் சிறந்த நிலையுள்ள நாடுகளுக்கு அவர்களும் போகமுடியாமல் செய்கிறார்கள். இந்தப் பிரச்சினை தீருவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. பாகுபாடு இல்லாமல் இடவசதியில் எல்லோருக்கும் சமநிலை இருக்கும்படிச் செய்வது ஒன்றுதான் வழி.

இனத்தத்துவம் சமுதாயத்தில் எவ்வாறு வேர் விட்டிருக்கிறதென்பதைக் கண்டுகொள்வோமானால் இன உயர்வு-தாழ்வு அடிப்படையில் புதிய செய்முறைகள் உருவாகாதபடி தடுக்கலாம். நம்மில் பெரும்பாலோர் இப்பணியில் ஈடுபடவேண்டும். புது வெற்றிகள் இனத் தத்துவத்திற்குக் கிடைக்காதபடி செய்வதற்கு இது ஒரு தற்காப்பு நடவடிக்கையாக அமையக்கூடும்.

நாம் குறைந்தபட்சமாகச் செய்யக் கூடியது இதுதான். இதைச் செய்யாமல் விட்டோமானால் உலகம் ஒன்றோடொன்று மல்லுக்கு நிற்கும் இரண்டு பெரும் முகாம்களாகப் பிளவுபடுகின்ற நிலைமையை நோக்கி செல்லும். நிலைமை மேற்கொண்டு மோசமாகாதபடி முதலில் தடுத்து நிறுத்த நம்மால் இயலும். மிக முக்கியமான பிரச்சினைகளை முதலில் எடுத்துக் கொண்டு அவற்றிற்குத் தீர்வுகாண்பது அசாத்தியமல்ல. அரசாங்கங்களே மீள முடியாதவாறு இனத் தத்துவங்களில் பிணைப்பட்டிருக்கின்ற நிலைமைக்கு நாம் தீர்வுகாண வேண்டும். முடிந்தால் 20-வது நூற்றாண்டின் தார்மிக உயர்நிலைகளுக்கு இசைவாக அவற்றைத் தீர்ப்பதற்கு நிர்ப்பந்தங்களை சர்வதேச அடிப்படையில் பிரயோகிக்க வேண்டியிருந்தால் அவ்வற்றைப் பிரயோகித்துத்தான் ஆகவேண்டும்.

# சர்வதேசச் சட்டத்தின் புதிய எல்லைகள்

## ஸீன் மாக்பிரெய்ட்

சமீப கால வரலாற்றில் மனித உரிமைப் பிரகடனம் ஒரு முக்கிய கட்டம். மக்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு கருவி என்றும் அதைக் குறிப்பிடலாம். அது நசுக்கப்பட்ட மக்களின் உரிமை சாசனம். மிகச் சக்திவாய்ந்த அரசாங்கமும் மக்களுடைய உரிமைகளில் அளவுக்கு மீறித் தலையிடக்கூடாதென்று அது எடுத்துரைக்கிறது. சட்ட ஆட்சியினால் மக்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்று எடுத்துரைப்பது சட்ட ரீதியாக ஒரு முக்கியமான கருத்து. சாசனத்தின் உயிர்நாடியாக இருப்பது அது தான்.

உரிமைப் பிரகடனம் வெறும் கொள்கைகளை எடுத்துரைக்கும் அறிக்கையல்ல. நுணுக்கமாகவும், குறிப்பாகவும் அது மானிட உரிமைகளை எடுத்துரைக்கிறது. அதிலுள்ள விதிகளை பல நாடுகள் தங்கள் அரசியல் சட்டங்களில் இணைத்துக் கொண்டிருக்கின்றன. அதிகார எல்லைகளை நிர்ணயிப்பதில் நீதிபதிகள் இந்த சாசனத்தை ஒரு முக்கிய தஸ்தாவேஜாகக் கருதுகின்றனர். உலக மாநாடுகளில் இது பலமுறை ஊர்ஜிதப் பட்டிருக்கிறது. மக்கள் பிரகடனம் வெளியாகி இருபது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இந்த இருபதாவது ஆண்டை, 1968ஐ, சர்வதேச மக்கள் உரிமை ஆண்டாகக் கொண்டாடவேண்டுமென்று ஐ. நா. பொதுச் சபை ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது. இது ஒன்றே அச்சாசனத்தின் உயர்வை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

சர்வதேசச் சட்ட நிபுணர்களில் சிலர், மேற்கூறிய சாசனத்தின் விதிகளை சர்வதேச சட்டத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டுமென்று நினைக்கின்றனர். 1907ல் நடந்த ஹேக் மகாநாட்டைப் பலர் மறந்திருக்கலாம். ஆயினும், அதில் நிறைவேறிய தீர்மானத்தையும் உரிமைச் சாசனத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

''நாகரிக மக்களின் பழக்கவழக்கங்களிலிருந்தும், உலக மக்களின் சட்ட திட்டங்களிலிருந்தும், அவர்களுடைய மனச் சாட்சியினின்றும் தோன்றிய தேசச் சட்டங்கள்''—என்று ஹேக் தீர்மானத்தில் இருக்கிறது.

மனித உரிமைச் சாசனமானது, பல்வேறு உலகநாடுகளின் சட்டங்கள் 20வது நூற்றுண்டிற்கேற்றதாக உள்ள மனிதகுலத்தின் நியதிகள், அவர்களுடைய மனச் சாட்சியின் அடிப்படை ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

உரிமைச் சாசனத்தின் உயர்வு பற்றியும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐ.நா.வின் சேவை பற்றியும் வார்த்தையளவில் புகழ்மாலை சூடுவதற்குரிய ஒரு வாய்ப்பாக 1968ஐ கருதக் கூடாது. இந்த சர்வதேச மனித உரிமை ஆண்டு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால், தேசீய, சர்வதேசீய அரங்குகளில் இப்பிரகடனம் எந்த அளவுக்கு அமுலுக்கு வந்திருக்கிறது என்று ஆராயும் வாய்ப்பாக இது இருக்கவேண்டும். மனித உரிமைத் துறையில் வேலை செய்யும் அரசாங்கச் சார்பற்ற சர்வதேச ஸ்தாபனங்கள் எல்லாம் இதை ஒப்புக் கொள்ளுகின்றன. 1968ல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இதற்காக உடனடி வேலைத் திட்டம் வகுக்க வேண்டும். புதிய இலக்குகளை நாம் அடைய முயல வேண்டும்.

சாசனத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில்—அமுல் நடத்துவது என்ற துறையில்—இப்போது எல்லா முயற்சிகளும் நடக்க வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்றால், அவற்றின் பட்டியல் ஒன்றைத் தயாரித்துக்காட்டிவிட்டால் போதாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக இந்த சாசனம் ஒரு வழிகாட்ட வேண்டும். மனிதகுலத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி வருத்தம் தெரிவித்தால் மட்டும் போதாது. அக்கொடுமைகள் பற்றித் தீர்ப்பளிக்க வேண்டும். அவற்றிற்குப் பொறுப்பானவர்களைப் பகிஷ்கரிக்கவேண்டும்.

ஒரு நாட்டைப் பொறுத்தவரை உடனடியாக அது செய்யவேண்டிய வேலை ஒன்று உண்டு. உலக சாசனத்திலுள்ள உரிமைகளை உள்நாட்டில் பாதுகாப்பதற்கு, நீதிபதிகளைக் கொண்ட ஸ்தாபனங்களை நிறுவவேண்டும். இவை சுதந்திரமாகவும், தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு இன்றியும் இருக்கக்கூடிய நீதிபதிகளின் கைகளில் இருக்கவேண்டும். இவை அரசியல் துறையில் ஆதரவு பெற நினைப்பவர்களிடம் இருக்கக்கூடாது.

துரதிருஷ்டவசமாக, இவை நாடுகளில் ஏற்பட்டால் போதாதென்று அனுபவ வாயிலாக நமக்குத் தெரிகிறது. அரசியல் குழப்பங்கள் நேரும்போதும், கொள்கைச் சண்டைகள் எழும்போதும் அரசாங்கங்களும், நீதிபதிகளுங்கூட தங்களுடைய சொந்த கருத்துக்களை பாதிக்கப்பட்டோர் மீது சுமத்துகிறார்கள். சிறுபான்மையோர் அல்லது தனிப்பட்டவர் உரிமைகள் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. தொழில் நிபுணர்கள் ஆதிக்கம் ஓங்கிவரும் இந்நாட்களில், பலநாடுகளில், அதிகாரிகள் தங்களுடைய ஆதிக்கத்தில் உள்ளவர்கள் மீது இதே தவறைச் செய்கிறார்கள். எனவே, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் சர்வதேசீய மேற்பார்வை இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இம்மேற்பார்வை ஸ்தாபனம் சர்வ தேசிய அளவிலோ அல்லது பிராந்திய அளவிலோ நிறுவப்படலாம். அவ்விரண்டிடங்களிலும் இருப்பது மிகவும் நல்லது. இதுவரையில், இவ்வாறு பிராந்திய அளவில் வேலைசெய்யும் ஸ்தாபனம் ஐரோப்பிய மனித உரிமைப் பாதுகாப்பு மாநாடு ஒன்றுதான். இதைப் போன்ற ஸ்தாபனங்களை ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தின் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா முதலிய பகுதிகளிலும் நிறுவவேண்டுமென்று பன்முறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதில் அக்கறை குறைவாக இருக்கிறதென்று சொல்லமுடியாது. இத்திட்டத்துக்கான நகல்களையும் சில இடங்களில் தயாரித்திருக்கின்றனர். ஆனால் முன்னேற்றம் மிகவும் மெதுவாகவே நடந்து வருகிறது. 1968ல் இதைப்போன்ற ஸ்தாபனங்களை நிறுவி, அங்கங்கே வேலை செய்யுமாறு செய்வதும் ஒரு முக்கிய வேலையாக இருக்க வேண்டும்.

---

**ஸீன்மாக்பிரெய்ட்** அயர்லாந்து நாட்டவர் மனித உரிமை ஆண்டுக்கான சர்க்கார் அல்லாத ஸ்தாபனங்களின் சர்வதேச கமிட்டி தலைவர், புகழ் பெற்ற நீதிமானான இவர் ஐரோப்பியக் கவுன்சிலின் மந்திரிகளின் குழுத் தலைவராக இருந்தார். (1949-50) பல சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டவர். 1948-51ல் அயர்லாந்தின் வெளி விவகார அமைச்சராக இருந்தவர். 1963லிருந்து சர்வதேச நீதிபதிகள் குழுவின் செயலாளராக இருந்து வருகிறார்.

நியூயார்க்கிலுள்ள ஐ. நா. தலைமையகக் கட்டிடத்திலுள்ள பிரமாண்டமான சுவர் சித்திரம். ஸ்பானிஷ் ஓவியர் ஜோஸ் வெலாஜானடி தீட்டியது. நீதிக்கும் அமைதிக்குமான போராட்டத்தில் சர்வதேச ஒத்துழைப்பை உருவகப்படுத்துவது.

Photo United Nations



## சட்டத்தின் முன்பு சமத்துவம்

சட்டத்துக்கு எல்லோரும் சமம். எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லோருக்கும் சட்டப் பாதுகாப்பு சமமாக உண்டு. இப் பிரகடனத்தை மீறும் வகையில் காட்டப்படும் பாகுபாட்டுக்கெதிராக எல்லோருக்கும் சமப் பாதுகாப்பு உண்டு.

உரிமைப் பிரகடனம் 7வது பிரிவு

# மனித உரிமைகளுக்கான உலக நீதி மன்றத்தை நிறுவ இன்னும் காலம் வரவில்லையா?

**நீதி பெறும் உரிமை**

**குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் சட்டப்படி விசாரணை நடத்தி குற்றம் நிருபிக்கப்படும் வரை நிரபராதியாகக் கருதப்பட உரிமையுண்டு. தன் சார்பில் வாதாட எல்லா வசதிகளும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.**

உரிமைப் பிரகடனம் 11வது பிரிவு.

சாசனத்தை அமுல் நடத்தும் வேலை சர்வதேச அளவிலும்கூட மெதுவாகவும் அரைகுறையாகவும் இருக்கிறது. இன வேறுபாடுகளை ஒழிப்பது, மனித உரிமைகள் பெறுவது ஆகியவை பற்றிய மாநாடுகளில் அமுல் நடத்தும் ஸ்தாபனங்களும் ஓரளவு உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், இவை நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதை எடுத்துக்காட்டிய போதிலும் கூட அவ்வளவு திருப்திகரமாக இல்லை. உண்மையாகப் பார்க்க வேண்டுமென்றால் இப்படி உருவாக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் அமுலுக்கு வரவில்லை. இன்னும் பல நாடுகளில் அரசாங்கங்கள் ஒப்புக் கொண்டால்தான் அமுல் நடத்தும் ஸ்தாபனம் வேலை செய்யமுடியும். இப்படி ஒப்புக்கொள்ளவில்லையென்பதனால் அமுல் நடத்தும் ஸ்தாபனம் வேலைசெய்யவில்லை.

ஐ. நா. ஸ்தாபனம் இப்போது உரிமைச் சாசனத்தை அமுல் நடத்துவதற்குச் செய்யும் முயற்சிகளில் ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது. இம்முயற்சிகள் கொஞ்சங் கொஞ்சமாகவும், விட்டு விட்டும், அரசியல் ரீதியிலும் செய்யப்படுகின்றன. நீதிமன்றங்கள் மூலமாகச் செய்யும் முயற்சி குறைவாய் இருக்கிறது. உரிமைச் சாசனத்தை அமுல் நடத்த வேண்டுமென்றால் முதலில் எல்லாவற்றையும் நடுநோக்குடன் பரிசீலனை செய்யக்கூடிய தானே இயங்கக்கூடியதாக உள்ள ஸ்தாபனம் ஒன்றை நிறுவவேண்டும். இது சிலருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகவும், அரசியல் நிலைமையை மனதிற்கொண்டு இயங்குவதாகவும் இருக்கக்கூடாது. நீதித்துறையில் இதுவரை உருவாக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும்.

மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் கோர்ட் ஒன்று ஐரோப்பாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட உரிமைகளைப் பகிரங்கமாக எடுத்துரைப்பது அதனுடைய கடமை. இதைப்போன்ற உலக மன்றம் ஒன்று ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்பு இன்னும் ஏன் வரவில்லை? பாதிக்கப்பட்ட உரிமைகளை எடுத்துக் கூறுவது இவ்வுலக மன்றத்தின் கடமையாக இருந்தபோதிலும், உலக ஸ்தாபனம் ஒன்றிலிருந்து வரும் சொல் என்ற அளவிற்கு அதற்கு நல்ல மதிப்பு இருக்கும். உரிமைகளில் எது சரி, எது தவறு என்று நிர்ணயிப்பதில் உலக மன்றத்தின் தீர்ப்பு மிக உபயோகமுள்ளதாய் இருக்கும். எப்படியிருந்த போதிலும் ஐ. நா. கமிட்டி அல்லது உபகமிட்டி தீர்ப்பை விட இதற்கு அதிக மதிப்பு உண்டு. அரசியல் அடிப்படையில் இக்கமிட்டிகள் நிறுவப்படுகின்றன. இவற்றின் அங்கத்தினர்களுக்கு நீதி மன்ற நோக்கு இருக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. மேலும், ஐ. நா. கமிட்டிகள் தற்காலிகமானவை. நாம் உண்டாக்க நினைக்கும் மன்றமும் நிரந்தரமானது.

முதன் முதலில் செய்யவேண்டிய அவசர வேலையொன்று இருக்கிறது. மனித உரிமைகளைப்பற்றிய எல்லா ஐ.நா. ஒப்பந்தங்களையும் அந்தந்த நாடுகள் ஒப்புக் கொள்ளச் செய்யவேண்டும். சர்வதேச ஒப்பந்தங்களை ஒப்புக் கொண்டு கையெழுத்திட்ட சில நாடுகள்கூட இன்னும் அவற்றை ஊர்ஜிதம்செய்யவில்லை. அரசாங்க அதிகாரிகள் எதிலும் மெதுவாகவே இருப்பார்கள்: இதுவும் அதன் விளைவாக இருக்கலாம். சில நாடுகளில் அரசியல் நிலைமை மாறி, புதிய பார்லிமெண்டுகள் இவ்வொப்பந்தங்களைப் பரிசீலனை செய்வதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். எதுவாயிருந்தபோதிலும், எல்லா நாடுகளும் சர்வதேச ஒப்பந்தங்களை 1968ல் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். சுமார் இருபது ஆண்டுகளாக இவை விவாதிக்கப்பட்டுவிட்டன. ஐ.நா. பொதுச்சபை இவற்றில் பல ஒப்பந்தங்களை ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

உரிமை சாசனத்தை 1948ல் உலகத் தலைவர்கள் ஏற்றுக்கொண்ட காரணங்களில் ஒன்று, இரண்டாவது உலகப் போர் காலத்தில் நடைபெற்ற கொலையும், மக்கள் உரிமைகளுக்கு வந்த பேராபத்தும் காட்டுமிராண்டித்தனமும் மீண்டும் தலைதூக்கவிடக் கூடாது என்பதுதான்.

ஆனால், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, இன்று, மிருகத்தனமான நிகழ்ச்சிகளும், நினைத்தாலே வெட்கப்படக்கூடிய நடவடிக்கைகளும் பல இடங்களில் நடந்து வருகின்றன. இந்நிகழ்ச்சிகளைக் கேட்டவுடன் உள்ளம் ஒரு நிமிடம் திகைத்து நிற்கிறது. அடுத்த கணமே, அது மறைந்துவிடுகிறது. மிருகத்தனம் என்பது கிட்டத்தட்ட ஒரு தொற்றுநோய் என்று கூறலாம். போராட்ட காலத்தில் ஒருவர் இழைத்த கொடுமைகள் பிறகு எழும் கொடுமைகளுக்குப்பிறப்பிடம் ஆகிறது. இவற்றைக் கண்டிக்காமல் விட்டு விடுவதும், மறந்து விடுவதும் இவை மீண்டும் தலை தூக்குவதற்குக் காரணமாகின்றன.

மனிதர் தரத்தைக் குறைக்கும் தொற்றுநோய் கொடுமை. இது மிக முக்கியமான பிரச்சினை. மதத் தலைவர்கள், அரசியல் நிபுணர்கள், சமூக விஞ்ஞானிகள், தத்துவப் பேரறிஞர்கள், சட்ட நிபுணர்கள் ஆகிய எல்லோரும் சிந்திக்க வேண்டிய நீதிப் பிரச்சினைகள் பல இதில் அடங்கியிருக்கின்றன. உலக மக்கள் உரிமை ஆண்டாகிய 1968ஐ காட்டு மிராண்டித்தனமான செயல்களை எதிர்த்து ஓர் இயக்கம் நடத்துவதற்கு வாய்ப்பாக ஏன் கருதக்கூடாது? உரிமைப் பிரகடனத்தின் ஐந்தாவது ஷரத்தை உண்மையாக்கவேண்டும். இத்துறையில் யுனெஸ்கோ மிகச் சிறந்த சேவை செய்திருக்கிறது. எதிர்காலத்தில் இவ்வேலையை மேலும் தொடர்ந்து, மனிதர்களிடையில் காட்டு மிராண்டிச் செயல்களைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை யுனெஸ்கோ எடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொடுமை, காட்டு மிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடுவது ஆகியவை குற்றமாகப் பல நாடுகளில் கருதப்படுகின்றன. இவற்றிற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கும் சட்டங்களும் அங்கு உள்ளன. சர்வதேசச் சட்டத்திலும் இவற்றைக் குற்றங்களாக ஏன் கருதக்கூடாது? குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுக்குமாறு கேட்பதிலும், போக்குவரத்து, துப்பறிதல், வர்த்தகம், வெளிநாட்டுத் தூதர் உறவு ஆகியவை போன்ற துறைகளில் சர்வதேசச் சட்டம் நன்றாக வேலை செய்கிறதென்றால், அவற்றைவிட முக்கியமான மனித உரிமைப் பாதுகாப்புத் துறையில் மட்டும் ஏன் செய்யக் கூடாது? மனித குலத்திற்கு எதிராக நடக்கும் குற்றங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு சர்வதேச அதிகார ஸ்தாபனத்தை ஐ.நா. நிறுவும் காலம் வந்துவிட்டதல்லவா?

முதலில் ஐ.நா., செஞ்சிலுவைச் சங்க கோட்பாடுகள் ஆகியவற்றை மீறுபவர்களை உலக தீர்ப்பு மன்றம் கண்டிக்கவேண்டும். இந்த மன்றத்துக்கு நாட்டின் சட்டங்களையும், மனிதப் பண்பாடுகளையும் மீறுபவர்களைப் பற்றித் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தையும் அளிக்கலாம். மனசாட்சிக்கு எதிராக நடப்பவர்களைக் கண்டுபிடித்துக் கூறுவதில் இக்குழு கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும். இதற்குப் பிறகு நாளடைவில் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் என்னவென்பதையும், அந்த விஷயத்தில் எடுக்கவேண்டிய நட



Photo © Magnum-Henri Cartier-Bresson

வடிக்கை பற்றியும் உலக மாநாடு கூட்டி ஆலோசிக்கலாம். ஆனால் இப்போதைக்கு மேற்கூறிய குழுவை நியமித்து குறிப்பிடப்பட்ட கடமையையும் அதனிடம் ஒப்படைக்கலாம்.

இரண்டாவது உலக யுத்த முடிவில் புதிய சர்வதேசக் கருத்தொன்று உருவாயிற்று. சர்வதேச ராணுவ தீர்ப்பு மன்ற சாசனம் என்ற பெயரில் உருவாகி, அது மனித உரிமைகளுக்குப் புறம்பான செய்கைகளை விசாரிக்கும் பொறுப்பை ஏற்றது. பேராசிரியர் லாடர்பேக்ட் பின்வருமாறு (ஆப்பென்ஹீம், ஏழாவது பதிப்பு) கூறுகிறார்:

''...நாட்டின் சட்டத்திற்கு மேலான அடிப்படை மனித உரிமைகள் இருக்கின்றன என்பது இப்போது ஊர்ஜிதமாகிறது. இவற்றிற்கு தண்டனை அளிக்க சர்வதேச அடிப்படையில் இடமிருக்கிறது என்றும், நாட்டின் சட்டதிட்டங்களே மேற்கூறிய உரிமைகளுக்கு எதிராயிருந்த போதிலும், மனித உரிமைகளே முக்கியமானவை என்பதும் இதிலிருந்து நன்றாகத் தெரிகிறது.''

இந்த மன்றம் அதிகாரம் செலுத்திய முறையில் ஒரு குறையிருக்கிறது. போரில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியுற்றவர்களை நடத்திய விசாரணை அது. இது ஒரு குறையாகுமானால், மனித குலத்திற்கு எதிராக நடக்கும் குற்றங்களை விசாரிப்பதற்கு நிரந்தர மன்றமொன்றை நிறுவுவதற்கு ஒரு நல்ல காரணமாகுமல்லவா? இதைப்போன்ற மன்றம் ஏதோ ஒரு சிலர் இஷ்டப்படி ஏற்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டிற்கு இலக்காகாது என்பதில் ஐயமில்லை.

இதைப் போன்ற மன்றத்தின் தீர்ப்புகளை சில இடங்களில் இப்போது அமுல் நடத்த முடியாமலிருக்கலாம். ஒவ்வொரு கொடுஞ்செயலும் யாரோ ஒருவரால் செய்யப்படுகிறது, அல்லது தூண்டப்படுகிறது. அவர் யாரென்பதைக் கண்டுபிடித்து சர்வதேசக் குற்றவாளியென்று பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துவது நாம் செய்யக்கூடிய குறைந்தபட்ச வேலை. இதனால் ஓரளவு குற்றங்களைத் தடுக்கலாம். மனிதர் மிருகங்களாக மாறுவதைத் தடுக்கும் சக்தியாக இது இருக்கக்கூடும்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் உலக கோர்ட் அல்லது உரிமைகளை மீறுபவர்களைத் தண்டிக்கும் அதிகாரம், உருவாக்கப்பட வேண்டுமானால் ஓரளவாவது நாட்டின் அதிகார எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் உயர்வை ஒப்புக்கொள்ளவேண்டும் என்பது உண்மையே. எந்த அளவுக்கு இதை ஒப்புக்கொள்ளலாம் என்பதை அவரவர்கள் இஷ்டத்திற்கு விட்டுவிடலாம்.

உலகம் இன்று உள்ள நிலைமையில், ஆட்சியாளருக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு என்பது பழங்கொள்கையாகிவிட்டது. மக்கள் உரிமைகளைக் காப்பாற்றியே அவர்கள் ஆளமுடியும். இன்னும்கூட, பல நாடுகள் தங்களுக்கு எல்லையற்ற அதிகாரம் இருப்பதைப் போல் பேசுகின்றன. நாட்டின் மறுக்க முடியாத அரசுரிமையென்று அவ்வதிகாரத்தை அவை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு உடன்பாடும் வர்த்தக ஒப்பந்தமும்கூட மேற்கூறிய மறுக்க முடியாத தேசீய உரிமைக்கு அப்பாற்பட்டது.

ஐரோப்பாவில் தம்முடைய நாட்டின் அதிகாரங்களைப் பொதுவாக விட்டுக் கொடுக்காதவர்கள் கூட இப்போது மக்கள் உரிமைப் பாதுகாப்பு மன்றத்திற்கு சில விஷயங்களை விட்டுக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவில் உள்ள நாடுகள் இதைவிட அதிகமாக விட்டுக் கொடுத்திருக்கின்றன. இப்படி விட்டுக் கொடுத்து அக்கூட்டுறவில் சேருவதற்கு பல ஐரோப்பிய நாடுகள் இன்னும் முயற்சித்துக்கொண்டிருக்கின்றன.

உரிமைப் பாதுகாப்பு சர்வதேச சங்கம் மற்றவர் கூறாமலே இயங்க வேண்டும். அதாவது, தம்முடைய உரிமைகள் பறிபோனதாக ஒருவர் மனுச்செய்து கொண்டவுடன், அந்நாட்டு அரசாங்கத்தின் அனுமதியின்றியே அம்மன்றம் வேலைசெய்யத் தொடங்க வேண்டும். ஐரோப்பிய மன்றத்தின் 25, 53 ஷரத்துக்களில் (மனுச் செய்து கொள்வதற்குத் தனி

# உலகக் கருத்தின் வற்புறுத்தலிலிருந்து கொடுங்கோலாட்சி தப்ப முடியாது

நபர் உரிமை, மன்றத்தின் அதிகாரத்தை ஏற்க வேண்டிய கட்டாய ஷரத்து) ஓரளவிற்குக் குறைபாடுகள் இருக்கின்றன.

சர்வதேச ஸ்தாபனம் எதுவாக இருந்த போதிலும், பாதிக்கப்பட்ட மனிதன் நேரடியாக அதற்கு மனுச் செய்து கொள்ளும் உரிமை இருக்கவேண்டும். எந்த நாட்டு அரசாங்கமும் தனி மனிதனொருவன் செய்துகொள்ளும் மனுவைத் தடுக்கும் நிலையில் இருக்கக் கூடாது. ஒருவர் நியாயம் பெறுவது அவ்வப்போது தோன்றும் அரசியல் நிலையைப் பொறுத்ததாகவும் இருக்கக் கூடாது.

எல்லா அதிகாரங்களும் தங்களுக்கே உண்டு என்று நினைத்துக் கொண்டிருக்கும் நாடுகள், சர்வதேச சட்டத்தின்படி தனி நபர்களுக்கு உரிமையேதும் இருக்க முடியாது எனக் கூறுகின்றன. இது தவறு. முதலாவது உலகப் போர் காலத்திற்குப் பிறகு அதைப்போன்ற கொள்கை கைவிடப்பட்டு விட்டது. தனிப்பட்டவர்களும் கூட மனுச்செய்து கொள்ளும் உரிமையை மேல் சைலீஷிய ஒப்பந்தங்கள் குறிப்பாக ஒப்புக்கொள்கின்றன. ஐரோப்பிய மன்றம், இன ஒதுக்கலை ஒழிக்கவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் கூடிய சர்வதேச சங்கம் ஆகியவையெல்லாம் சர்வதேச சட்டத்தில் தனி நபர் மனுச்செய்து கொள்ளும் உரிமையை ஏற்கின்றன.

சர்வதேச நீதி மன்றங்களோ, அல்லது ட்ரிப்யூனல்களோ சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். கூடிய வரையில் அரசியல் அடிப்படையில் அவர்களைப் பொறுக்கியெடுக்காமல் இருப்பதே நல்லது. அவர்கள் தங்களுடைய அரசாங்கத்தின் கைப் பொம்மைகளாக இல்லாமல் உலக மதிப்பிற்குரிய வகையில் நீதி உணர்ச்சி மிக்கவர்களாய் இருக்கவேண்டும்.

சர்வதேச நீதிமன்ற முடிவுகளை அமுல் நடத்தும் ஸ்தாபனம் நிறுவுவது ஒரு புறம் இருக்க, மனித உரிமைகள் பாதுகாப்பு ஐ.நா. ஹைகமிஷனர் ஒருவரை நியமிக்கும் பிரச்சினையும் இப்பொழுது ஆழ்ந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அகதிகள் பிரச்சினையைக் கவனிக்கும் ஹைகமிஷனரைப்போல இவரும் இருக்க வேண்டுமென்பது சிலருடைய கருத்து.

இந்தத் திட்டமானது ; ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஐ. நா. வுக்கு அதன் சாசனம் 13 (1) ஷரத்துப்படி பொறுப்புகளை நிறைவேற்ற ஒரு நல்ல ஏற்பாடு நடந்ததாகும். மனித உரிமைகளையும், மக்களுடைய அடிப்படைச் சுதந்திரங்களையும் பொறுத்தது அது. இத்திட்டத்திலுள்ள முக்கியமான ஆலோசனைகளிலொன்று என்னவென்றால் அரசாங்கங்கள் ஹைகமிஷனரின் உதவியைக் கோரினால் அதற்கு ஹைகமிஷனர் இணங்கலாம் என்பதே. அரசாங்கங்கள், குறிப்பாகப் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளிலுள்ள அரசுகள், அடிக்கடி மனித உரிமை பற்றிய பல சிக்கலான பிரச்னைகளை சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் அவைகளுக்கு உதவியும் ஆலோசனையும் தேவையாயிருக்கின்றன. அதே சமயத்தில் அவர்களுக்கு உபயோகமாயிருக்கக் கூடிய ஐ. நா. நிறுவனம் ஒன்றுமில்லை. இதனால் அரசாங்கத் தொடர்பற்ற ஸ்தாபனங்களை அவை உதவி செய்யுமாறு கோருகின்றன. ஆனால் இவ் வேலையைச் செய்வதற்கு அரசாங்கத் தொடர்பற்ற ஸ்தாபனங்கள் அவ்வளவு உகந்தவையல்ல. இதற்குத் தேவையான வசதிகள் அவற்றிடம் இல்லை. அரசியல் ரீதியிலும் அந்த ஸ்தாபனங்களை ஒப்புக் கொள்வதற்கு புதிதாக விடுதலைபெற்ற நாடுகள் தயங்குகின்றன.

ஐ. நா. பொதுச் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு ஹைகமிஷனர் இந்தப் பொறுப்பை ஏற்பது மிகவும் நல்லது. பொதுச் சபையினால் நியமிக்கப்பட்டவர் என்ற அளவிற்காவது அவருக்கு மதிப்பும், மரியாதையும் இருக்கும். வேறு எவரும் இப்பொறுப்பை மேற்கொள்ளாததனால்தான் அரசாங்கச் சார்பற்ற ஸ்தாபனங்கள் இப்போது பெருமளவிற்குத் தொடர்பு கொண்டிருக்கின்றன. சுதந்திரமான, சொந்த வெறுப்பு, விருப்புகளற்ற ஒரு ஹைகமிஷனரை ஐ. நா. நியமிப்பதன் மூலமாக, இப்போது அரசாங்கச் சார்பற்ற ஸ்தாபனங்கள் செய்துவரும் வேலைகள் பலவற்றை ஐ. நா. சபை செய்ய முடியும்.

மனித உரிமைகளைப் பாதுகாக்க ஒரு ஹைகமிஷனரை நியமிப்பதென்பது புதிய கருத்தே ஆயினும், அப்படிச் செய்வது மிகவும் உபயோகமான வேலை என்பதில் ஐயமில்லை. நாடுகளின் அதிகாரத்தில் இது தலையிடுவதாகக் கூறவே முடியாது.

மனித உரிமைகள் பிரச்னையில் தொடர்புள்ள ஆறு அரசாங்கச் சார்பற்ற ஸ்தாபனங்கள் சமீபத்தில் மேற்கூறிய திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன.

''ஹைகமிஷனருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று இப்போது பொதுவாகக் கூறப்படும் பொறுப்புகள் இதில் கையெழுத்திட்டிருக்கும் சர்வதேச ஸ்தாபனங்கள் எதிர்பார்த்ததைவிடக் குறைவாகவே இருக்கின்றன. ஆனால் இப்போதுள்ள நிலைமையில் பல அரசாங்கங்கள் இதைவிட அதிகமான பொறுப்புள்ள ஒருவரை ஒப்புக் கொள்ள மாட்டாதென்று தோன்றுகிறது.''

இந்தத் திட்டத்தையாவது 1968-ல் நிறைவேற்றாமல் போனால் அது ஒரு பெரிய குறைபாடாகும். இப்பொழுதே கடந்த மூன்று வருஷங்களாக இத்திட்டம் ஆலோசனையில் இருந்து வந்திருக்கிறது.

மனித உரிமைப் பாதுகாப்புப் பிரச்னையில் முன்னேற்றம் மிகவும் மெதுவாக இருக்கிறது. மிருகத் தனமான செயல்கள் பல இடங்களில் அதிகரித்து வருகின்றன. இவை மிகவும் வருந்தத் தக்கதேயாயினும், இவற்றால் நாம் நம்பிக்கையிழந்துவிட வேண்டியதில்லை. அதற்கு மாறாக உலகத்தில் விஷயமறிந்தவர்கள் எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதற்குத் தகுந்த சூழ்நிலை இப்போது இருந்து வருகிறது. அநாகரிகச் செயல்களைக் குறைப்பதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கங்களுக்கு உள்ள ஆர்வத்தைவிட உலகமக்களின் கருத்து அதிகத் தீவிரமாக முன்னேறி வருகிறது.

முன்னைவிட இப்பொழுது கல்வியறிவு பெருகி வருகிறது. செய்திப் போக்குவரத்து வசதிகள் அதிகரித்திருக்கின்றன. எனவே உலகம் என்ன நினைக்கிறது என்ற விஷயத்தினை எல்லோரும் இப்பொழுது முக்கியமாகக் கருதுகிறார்கள். சர்வாதிகாரிகளும், எதேச்சாதிகாரிகளும்கூட உலக மக்களின் அபிப்பிராயத்தைப் புறக்கணிக்க முடியாது. ஓரளவாவது அவர்கள் கவனித்துத் தான் ஆகவேண்டும். ஜனநாயக நாடுகளைப்பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. அதிகாரத்திலுள்ள எல்லாத் தலைவர்களும் இப்பொழுது உலக மக்கள் கருத்திற்குச் செவிசாய்த்து வருகிறார்கள். உண்மையில் இப்போது அதிகாரிகளிடையில் ஒருவித மன மாற்றம் ஏற்பட்டு வருவதாகத் தோன்றுகிறது. உலகம் என்ன நினைக்கும் என்று ஆலோசித்து அவர்கள் நடந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த மனமாற்றம் எவ்வளவு முக்கியமானது என்பதை இன்னும் பலர் புரிந்து கொள்ளவில்லை. சில அரசாங்கங்களுக்குக்கூட இது நன்றாகத் தெரியவில்லையென்றே தோன்றுகிறது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐ. நா. வும் அரசாங்கங்களும் என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி மட்டுமே இக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன். இத்துறையில் யுனெஸ்கோ செய்துள்ள சேவை பற்றி விசேஷமாகக் குறிப்பிடாமல் இக்கட்டுரையை முடிக்க முடியாது. மனித கௌரவத்திற்கு இன்றியமையாத உரிமைகள் பல இருக்கின்றன. அவற்றின் ஆத்மீக, கலாசார அம்சங்களைப் பாதுகாப்பது மிக முக்கியமென்று யுனெஸ்கோ முதலிலிருந்தே எடுத்துரைத்து வந்திருக்கிறது. இவை மிகவும் முக்கியமானவையென்பதில் சந்தேகமில்லை. மனித உரிமைகளின் முக்கியத்துவம் பற்றி இன்று உலக மக்கள் நன்கு அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதில் பெருமளவு யுனெஸ்கோ செய்த சேவைதான்.

## கருத்து சுதந்திரமும் செய்தி சுதந்திரமும்

ஒவ்வொருவருக்கும் கருத்தை வெளியிடும் சுதந்திரம் உண்டு. தலையீடின்றி ஓர் அபிப்பிராயம் கொள்ளவும் எந்த சாதனத்தின் மூலமும் எல்லைக் கட்டுப்பாடின்றி செய்திகளைப் பெறவும் வழங்கவும் உள்ள உரிமையும் இதில் அடங்கும்.

மனித உரிமைப் பிரகடனம்
19 வது பிரிவு.




Photo Unesco-Dominique Roger

# 'கற்றவர்கள் தான் சுதந்திரமாக இருக்கிறார்கள்'

| ஆரம்பக் கல்வி குழந்தைகள் சேர்ப்பு | 1950 | 1960 | 1965 |
|---|---|---|---|
| டென்மார்க்............... | 435,000 | 560,000 | 563,000 |
| பிரான்ஸ் (1)............... | 4,000,000 | 5,800,000 | 5,600,000 |
| ஹங்கேரி................... | 1,200,000 | 1,390,000 | 1,450,000 |
| நார்வே.................... | 340,000 | 430,000 | 415,000* |
| ஸ்வீடன்.................. | 708,000 | 808,000 | 817,000 |
| ஸ்விட்ஸர்லாந்து.......... | 477,000 | 571,000 | 463,000 |
| அமெரிக்கா................ | 24,000,000 | 34,000,000 | 36,300,000 |

*(1) பிற்பகுதி ஆரம்ப வகுப்புகள் 1960ல் நடுத்தரக் கல்வியுடன் இணைக்கப்பட்டுவிட்டன.*
** 1964ல்*

| நடுத்தரக் கல்வி மாணவர்கள் (1) | 1950 | 1960 | 1965 |
|---|---|---|---|
| பின்லாந்து............... | 95,000 | 300,000 | 340,000 |
| பிரான்ஸ்.................. | 817,000 | 1,700,000 | 2,318,000 |
| அயர்லாந்து............... | 54,000 | 83,000 | 93,000* |
| ஜப்பான்.................. | 6,600,000 | 7,800,000 | 11,130,000* |
| ஸ்வீடன்.................. | 135,000 | 222,000 | 198,000 |
| ஸ்விட்ஸர்லாந்து.......... | 93,000 | 143,000 | 255,000 |
| அமெரிக்கா................ | 6,900,000 | 11,157,000 | 13,300,000 |

*(1) சோவியத் யூனியனின் ஆரம்ப, நடுத்தரப்பள்ளி மாணவர்கள் 5 கோடிப் பேரை பிரித்துக் கூறுமது கடினம்.*
**1964ல்*

*(21ம் பக்கத் தொடர்ச்சி)*

மாணவர்கள் செலவுக்கு என்ன செய்கிறார்கள்? சிலருக்குக் குடும்பத்திலிருந்து பணம் வருகிறது. ஆனால் பெரும்பாலோர் சர்க்கார் உதவியிலும் பகுதிநேர வேலையில் தாங்களாகவே சம்பாதித்தும் படிக்கிறார்கள்.

உலக நாடுகளின் வரவு செலவு பெருமளவு பெருகியுள்ளதால் கல்வி பயனடைந்துள்ளது என்பது உற்சாக மூட்டும் விஷயமாகும். எல்லா நாடுகளிலும் கல்விக்கென ஒதுக்கப்படும் தொகை உயர்ந்துள்ளது.

## கல்வியும் தரமும்

கல்வித் துறையில் அளவைவிட தரம் முக்கியமானதாகும். கட்டிடங்களை கட்டி ஏராளமான குழந்தைகளையும் சேர்த்துவிட்டால்போதுமா? போதிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் வேண்டாமா? ஒவ்வொரு குழந்தையின் அறிவுக் கூர்மையும் புலப்படச் செய்ய வேண்டாமா? ''மனித ஆளுமை முழு வளர்ச்சி பெறுவதற்கேற்றதாக கல்வி இருக்கவேண்டும்'' என்று மனித உரிமைப் பிரகடனத்தின் 26வது பிரிவு கூறுகிறது.

# மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் பயனற்ற படிப்பு

நிறையக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதுடன் தகுதியான ஆசிரியர்களும், வசதியான வகுப்பறைகளும், தகுந்த பாடப் புத்தகங்களும், உகந்த சூழ்நிலையும் அவசியமாகும். நல்ல ஆசிரியரின் ஆதரவுடன் ஒவ்வொரு குழந்தையும் தன் அறிவையும், ஆற்றலையும், ஆர்வத்தையும், நினைவுத் திறனையும் வளர்த்துக்கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும். லட்சக் கணக்கில் குழந்தைகள் இருக்கலாம். ஆனால் தேர்ந்த ஓர் ஆசிரியரின் கீழ் 30 அல்லது 35 குழந்தைகள்தான் படிக்க முடியும்.

நடைமுறையில் இவ்வாறு இல்லை. படிக்கும் குழந்தைகள் நிறைய இருப்பதன் காரணமாக தகுதியுள்ள ஆசிரியர்கள் கிடைப்பது இல்லை. நார்வேயில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களில் 14% அதற்கான தகுதி பெறாதவர்கள். நடுத்தரப் பள்ளிகளில் இன்னும் அதிகம். நெதர்லாண்ட்ஸில் நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களில் 24% எந்தப்பட்டமும் பெறாதவர்கள். இஸ்ரேல் நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களில் பாதிப்பேர் அப்படித்தான். பல்கேரியப் பள்ளிகளில் 15% ஆசிரியர் இடங்கள் காலியாகவுள்ளன. தொழிற்பள்ளியில் இது 22%. டென்மார்க்கில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் தேவைக்கு 20% குறைவாகவே உள்ளனர். இலக்கியம், கணிதம், பௌதிகம் போதிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லை. பின்லாந்து ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களில் 6% தான் பட்டம் பெறாதவர்கள். ஆனால் நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களில் 45% போதிய தகுதி பெறாதவர்கள். ஸ்பெயினில் தொழிற்பள்ளி ஆசிரியர் பதவிகள் பல காலியாக உள்ளன.

அந்தந்த நாட்டு சர்க்கார்களே ஒப்புக்கொண்டுள்ள உண்மைகள் இவை. ஜெனிவாவிலுள்ள சர்வதேசக் கல்வி பீரோவுக்கு அனுப்பியுள்ள ஆண்டறிக்கையில் உள்ள தக்வல்கள் இவை. வளர்ந்து வரும் நாடுகளில் நிலைமை மேலும் மோசம்.

இதன் விளைவு. வகுப்பில் கூட்டம் அதிகம். காலையில் ஒரு கோஷ்டிக்கு வகுப்பு, மாலையில் மற்றொரு கோஷ்டிக்கு வகுப்பு, சொல்வதைக் கேட்டு மனப்பாடம் செய்து ஒப்பிக்குமாறு குழந்தைகளை தண்டிப்பது, ஆகியவை தான். மேதையாக ஆகக்கூடிய அறிவாற்றல் உள்ள குழந்தைகள் தவிர மற்றவையெல்லாம் கூட்டத்தோடு கோவிந்தா போட வேண்டியதுதான்.

வளர்ந்து வரும் நாடுகளில் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் பாதிப்பேர் முதல் அல்லது இரண்டாவது ஆண்டிலேயே பள்ளியிலிருந்து விலகிவிடுகிறார்கள். கால் பங்குக்கும் குறைவானவர்கள்தான் படிப்பை முடிக்கிறார்கள். இதனால் அவர்கள் கற்றது வீணாகிவிடுகிறது.

வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் நிலவும் தீங்கான விளைவுகள் கல்வியின் தரத்தைக் குறைப்பது, பரிட்சையில் தவறுவது, குழந்தைகள் மீது நிறைய வேலையைச் சுமத்துவது, சரியான முறையில் மனப்பக்குவப்படுத்தப்படாத குழந்தைகளை உருவாக்குவது, வாழ்க்கையில் உதவக்கூடிய எதையும் கற்றுக்கொள்ளாதது ஆகியவையாகும்.

அமெரிக்கக் கல்லூரி மாணவர்களில் கால்பங்கு பேர்தான் தங்கள் படிப்பைப் பூர்த்தி செய்கிறார்கள். பிரெஞ்சு கல்லூரிகளில் 5ல் ஒரு மாணவர்தான்

| உயர்தரக் கல்வி (மாணவர் தொகை) | 1955 | 1965 |
|---|---|---|
| பெல்ஜியம் | 42700 | 84000 |
| பிரான்ஸ் (சர்வ கலாசாலைகள் மட்டும்) | 157400 | 413700 |
| போலந்து | 157400 | 251800 |
| ஸ்வீடன் | 22600 | 68000 |
| சோவியத் யூனியன் | 1867000 | 3860000 |
| பிரிட்டன் | 131400 | 312200 |
| அமெரிக்கா | 2664000 | 4950000* |
| (*) 1964ல் | | |

பட்டம் பெறுகிறார். அளவுக்குத் தரத்தைப் பலியிடுவதால் ஏற்படும் விளைவுகள் இவை. இதற்குப் பரிகாரம் கண்டாகவேண்டும். கல்வி கற்பிப்பவர்கள் கண்காணிப்புடனும் தக்க சமயத்தில் செயல்படத் தயாராகவும் இருந்தால் அளவும் தரமும் ஒத்துப் போக முடியும். கல்வியின் அமைப்பிலும், தன்மையிலும் இந்த செயல் முறை இருக்கவேண்டும்.

இத்தனை பிரச்னைகளுக்கிடையில் யுனெஸ்கோ பயனுள்ள கருத்துக்களை வழங்கி ஊக்கி வருகிறது. வெவ்வேறு நாடுகளின் தேவைகளைப் புரிந்து கொண்டுள்ள யுனெஸ்கோ நல்ல கருத்துக்களைக் கண்டறிந்து எல்லோருக்கும் வழங்கக் கூடிய நிலையில் உள்ளது. ஏற்கனவே பல வழிகளில் இவ்வாறு செய்துள்ளது. அறியாமை ஒழிப்பு, கல்வித் திட்டம் வகுத்தல், சர்வதேச உணர்வுக்கான கல்வி, ஆசிரியர்கள் நிலை போன்ற பிரச்னைகளில் குறிப்பாக அது பயனுள்ள முறையில் உதவியுள்ளது.

## 'அடிமை முறை பற்றிய அறிக்கை'

அடிமை முறையும், அடிமை வியாபாரமும் எந்த அளவு இன்னும் உலகில் இருந்து வருகிறது என்பது பற்றி சர்வதேச விசாரணை ஐ. நா.வினால் அண்மையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அரபுக் குடியரசைச் சேர்ந்த மொகமத் அவாத் என்பவரால் தயாரிக்கப்பட்ட இது 78 நாடுகளிலிருந்து கிடைத்த தகவல்களை அடிப்படையாக கொண்டது. (39 நாடுகள் பதிலளிக்கவில்லை) ஐ. நா. பொருளாதார சமூக கவுன்சில், அறிக்கையை பரிசீலனை செய்த பிறகு அடிமை முறையை முழுவதுமாக ஒழிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

# யுனெஸ்கோ செய்தியறையிலிருந்து

**ஆகாயத்திலிருந்து கந்தக அமிலம்**

ஆண்டுதோறும் *10* லட்சம் டன் கந்தக அமிலம் ஸ்வீடனை மூழ்கடித்து வருவதாக பொறியியல் விஞ்ஞான ஸ்வீடிஷ் அகாடமி தலைவர் பேராசிரியர் ஸ்வென் புரோஹல்ட் கூறுகிறார். இதில் பெரும் பகுதி ஸ்வீடனிலேயே புகையினால் உண்டான போதிலும் கணிசமான அளவு பிரிட்டிஷ் தீவுகளிலிருந்தும் வடக்கு பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், மேற்கு ஜெர்மனியின் பெரும் தொழில் கேந்திரங்களிலிருந்து மேற்கு, தென்மேற்குக் காற்றினால் அடித்து வரப்படுகிறது.

**துணைக்கோள் வழியே செய்திப் பத்திரிகை**

பத்திரிகைகளின் வரலாற்றில் ஓர் அதிசயம் அண்மையில் நிகழ்ந்திருக்கிறது. லண்டன் செய்திப் பத்திரிகையின் முதல் பக்கம் துணைக்கோள் வழியே போர்ட்டோரிகாவிலுள்ள ஸான்ஜுவானுக்கு ஒலிபரப்பப்பட்டது. *15* நிமிடம் நீடித்த இந்த ஒலிபரப்பில் பத்திரிகைப் பக்கம் 'நெகடிவ் பிலிம்'போல பெறப்பட்டு அதிலிருந்து அச்சிடும் *1* 'பிளேட்' செய்யப்பட்டது. வெகு தூரங்களுக்குப் பத்திரிகை வினியோகம் விரைவாக நடைபெற இம்முறை வருங்காலத்தில் நிறையப் பயன்படுத்தப்படக் கூடும்.

**கடல் ஆய்வாளர்கள் கூட்டு முயற்சி**

யுனெஸ்கோவால் நிறுவப்பட்ட அரசுகளுக்கிடையேயான கடல் ஆராய்ச்சிக் கமிஷன் இரண்டு பெரிய சர்வதேசக் கூட்டுறவு ஆராய்ச்சியை நடத்தவிருக்கிறது. *1969*-ல் நடுநிலக் கடலிலும் *1970*-ல் கரிபியன் கடலிலும் இவை நடைபெறும். கடல் ஆராய்ச்சிக்கான விரிவாக்கப்பட்டுள்ள திட்டத்தில் கமிஷன், தகவல்கள் சேகரிப்பதை முறைப்படுத்தி விரைவு படுத்துவதற்காக ஒரு உலக நிலைய அமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளித்துள்ளது.

**போக்குவரத்து இரைச்சலை கட்டுப்படுத்த முயற்சி**

போக்கு வரத்து இரைச்சலைக் கட்டுப்படுத்தும் 'மொபைல் போலீஸ்' இவ்வாண்டு ஸ்வீடனில் பரீட்சார்த்தமாக செயல்படவிருக்கிறது. போலிஸ் கார்களில் எடுத்துச் செல்லக் கூடிய அளவு அடக்கமான இரைச்சல் கட்டுப்பாடு மீட்டர்கள் முதலில் பெரிய நகரங்களில் பயன்படுத்தப்படும். பிறகு நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

**நுண்ம உயிர் இயல் ஆராய்ச்சி**

நுண்மங்கள் மனிதவாழ்வில் நாளுக்கு நாள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. நோய்களை ஏற்படுத்துபவையாகவும், உணவையும், பானங்களையும் உற்பத்தி செய்து பதப்படுத்துபவையாகவும் தேசிய வளர்ச்சியிலும், அரசியல் பொருளாதார முடிவுகளிலும் முக்கிய அம்சங்களாகவும் கூட இவை இருந்து வருகின்றன. இதன் காரணமாக யுனெஸ்கோ காலாண்டு சஞ்சிகையான 'சமூகத்தின் மீது விஞ்ஞானத்தின் விளைவு' என்பது தன் இதழ் முழுவதையும் இந்த கண்ணுக்குப் புலனாகாத அரக்கர்களுக்காக ஒதுக்கியுள்ளது (இதழ் *17* மலர் *3*, *1967*)

இந்த சஞ்சிகை 'இம்பாக்ட்' ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் மொழிகளில் வெளி வருகிறது. சந்தா விவரம் யுனெஸ்கோவுக்கான இந்திய தேசியக் கமிஷன் புதுடில்லிக்கு எழுதிப் பெறலாம்.

**உலகத்திலுள்ள உறை பனியின் அளவு**

பூமியின் மேற்பரப்பிலுள்ள உறை பனி மற்றும் பனிக்கட்டியின் அளவை அறிஞர்கள் கணக்கிட இருக்கிறார்கள். இதற்கான கமிஷன் தலைவர் இப்பணியை மேற்பார்வையிடுகிறார். பூமி முழுவதும் எல்லா உருவத்திலும் உள்ள *136* கோடி கன கிலோமீட்டர் நீரில் *3.5* கோடி கன கிலோமீட்டர் தான் தூய நீர் கொண்டது. *80%* உறைபனியாகவும் பனிக்கட்டியாகவும் உள்ளது என்று அவர் அண்மையில் கூறினர்.

## செய்திக் கதிர்கள்...

■ ''ரிட்டர்ன் டு பிளாரன்ஸ்'' என்ற ஒரு புதிய யுனெஸ்கோ திரைப் படம் 1966 நவம்பரில் வெள்ளத்தினால் சேதமடைந்த நகரின் கலைக் கருவூலங்களைப் புதுப்பிக்க உதவிய பல நாடுகளின் நிபுணர்களுக்கும் தொண்டர்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்கிறது.

■ வெல்ஷ் ஐக்கிய நாடுகள் சங்கம் பாடலாசிரியரான டாக்டர் ஆலன் ஹோடிநாட்டை மனித உரிமைகள் பற்றி ஒரு பாடல் இயற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. 1968ம் ஆண்டு கார்டிஃப் இசை விழாவில் இது பாடப்படும்.

■ அமெரிக்கப் பள்ளிக்கூடக் குழந்தைகள் கடந்த இரண்டாண்டுகளில் 24 வளர்ந்துவரும் நாடுகளில் இரண்டு அறைகள் கொண்ட 150 பள்ளிக்கூடங்கள் கட்டப் போதுமான பணத்தைத் திரட்டியுள்ளனர்.

■ நூறு மீட்டர் விட்டமுள்ள சுழல் ''ஏரியல்'' கொண்ட ஒரு ''ரேடியோ டெலஸ்கோப்'' (இப்போது இங்கிலாந்து ஜோட்ரல் பாங்கியுள்ள மிகச்சக்திவாய்ந்த ரேடியோ டெலஸ்கோப்பினுடையதை விட 25 மீட்டர் அதிக நீளமானது) மேற்கு ஜெர்மனியிலுள்ள ஐபல் மலைகளில் அமைக்கப்படவிருக்கிறது.

■ லெஸோதா (முன்னர் பசுடோ லாண்ட்) யுனெஸ்கோவின் 122வது உறுப்பு நாடாகச் சேர்ந்துள்ளது.

## புத்தகங்கள்

யுனெஸ்கோ மொழிபெயர்ப்பு வரிசை.

*ஈரான்*

■ **மாஸ்நாவி கதைகள்**
—ஏ. ஜெ ஆர்பெரி
ஜார்ஜ் ஆலன் அன்வின் லிமிடெட், லண்டன்.

பாகிஸ்தான்.

■ **குஷால் திவான் கான் கட்டக் கவிதைகள்**
புஷ்டுவிலிருந்து மொழி பெயர்ப்பு—டி. என். மெக்கன்ஸி. ஜார்ஜ் ஆலன் அன்வின் லிமிடெட், லண்டன்.

இந்தியா.

■ **பர்த்ருஹரி கவிதைகள்**
மொழி பெயர்ப்பு பார்பரா ஸ்டோர் மில்லர் கொலம்பியா யுனிவர்சிடி பிரஸ், நியூயார்க், லண்டன்.

மென்டார்—யுனெஸ்கோ கலை நூல்கள்
ஃபான்டனா—யுனெஸ்கோ கலை நூல்கள்

■ **மேற்காப்பிரிக்காவின் கலை : சிற்பமும் முகமூடிகளும்**
அறிமுகம், வில்லியம் ஃபாக்.

■ **பிக்காஸோவின் கண்**
அறிமுகம், ரோலண்ட் பென்ரோஸ்

■ **வெர்மீர்**
அறிமுகம், ஏ. பி. டி. வ்ரிஸ்.

★

■ **சமுகம் இன்றும் நாளையும்**
சமுக விஞ்ஞானக் கட்டுரைகள். தொகுப்பு எல்ஜின் ஹன்ட், ஜுல்ஸ் கார்லின் மாக்மில்லன் கம்பெனி, நியூயார்க்.

■ **கருத்தடை மருத்துவ வரலாறு**
(உபயோகம் பற்றி ஆராய்ச்சி)
—நார்மன் ஹைம்ஸ்
காமட்பிரஸ், நியூயார்க்.

■ **அமைதி சாத்தியமே**
தொகுப்பு எலிஸபெத் ஜெ ஹாலின்ஸ், கிராஸ்மன், நியூயார்க்.

■ **கெப்ளரின் கனவு**
—ஜான் லியர்
கலிபோர்னியா யுனிவர்சிடி பிரஸ், பெர்க்லி.

■ **எதியோப்பியாவில் பிரயாணிகள்.**
தொகுப்பு ரிச்சர்ட் பங்குர்ஸ்ட் ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிடி பிரஸ் லண்டன்.

கிடைக்குமிடம் :
யுனெஸ்கோ தேசியக் கமிஷன்
புதுடில்லி.

தமிழில் வெளி வந்துள்ள

# இராமாயண, மகாபாரதப் பதிப்புக்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

| | | | | |
|---|---|---|---|---|
| 61. | கம்பராமாயணம்— ஆரணிய காண்டம் | — | உ. வே. சாமிநாதய்யர் நூலகம், சென்னை | 1961 |
| 62. | கம்பராமாயணம்— கிஷ்கிந்தா காண்டம் | — | ,, | 1959 |
| 63. | கம்பராமாயணம்— சுந்தர காண்டம் | — | ,, | 1927 |
| 64. | கம்பராமாயணம் | ஏ. எஸ். சுந்தரராஜன் | ராமனுதன் கல்லூரி, சுன்னுகம், இலங்கை | 1956 |
| 65. | கம்பராமாயணம்—முதல் பாகம்: 1—1210 செய்யுள்கள் இரண்டாம் பாகம்: 1211—2376 செய்யுள்கள் | டாக்டர் உ. வே. சாமினுத அய்யர் பதிப்பித்தது | உ. வே. சாமினுத அய்யர் நூலகம், சென்னை 20 | 1962 |
| 66. | குசலவ ராமாயணம் | ஒட்டக்கூத்தர் | கோவிந்தசாமி நாயுடு அண்ட் சன்ஸ், பீளமேடு | 1954 |
| 67. | கம்பராமாயணம் | வ. வே. சு. அய்யர் | — | 1950 |
| 68. | ராமாயண சாரம் | செய்யூர் முத்தையா முதலியார் | வி. ஜி. சூரியநாராயண சாஸ்திரி | 1902 |
| 69. | கம்பராமாயணம்— இரண்டு பாகங்கள் | சண்முகம்பிள்ளை பதிப்பு | நமசிவாய முதலியார், சென்னை | 1913 |
| 70. | கம்பராமாயணம் | சேஷாசல சாஸ்திரி உரையுடன் | ஆதிகலாநிதி அச்சகம், சென்னை | 1889 |
| 71. | பால ராமாயணம் | வாஸுதேவ் கோவிந்த ஆப்தே | வி. ரங்கநாத ராவ், சென்னை | 1914 |
| 72. | அற்புத ராமாயணம் | எஸ். ராஜா சாஸ்திரி | வாணிபூஷணம், சென்னை 5 | 1911 |
| 73. | வால்மீகி ராமாயண தனி சுலோகம் | ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார் தொகுத்தது | கோபால விலாஸ அச்சகம் | 1920 |
| 74. | வால்மீகி ராமாயணம்— தமிழ் வசனம் | எஸ். எம். நடேச சாஸ்திரி | கே. மகாதேவன், சென்னை | 1926 |
| 75. | வால்மீகி கண்ட ராமன் | வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி | கலைமகள் காரியாலயம், சென்னை | 1955 |
| 76. | வால்மீகி ராமாயண **வசனம்** | வடிவேல் பிள்ளை | — | 1883 |
| 77. | வால்மீகி ராமாயணம் | ஏ. வி. நரசிம்மாசாரியார் மொழிபெயர்ப்பு | ஆர். வெங்கடேஸ்வர் அண்ட் கோ, சென்னை | — |
| 78. | கம்பராமாயணம் | வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் | கோபாலகிருஷ்ணமாச்சாரி அண்ட் கோ, சென்னை | 1957 |
| 79. | கம்பராமாயணம் | ஏ. சுந்தரநாதம்பிள்ளை பதிப்பு | சிதம்பரமுதலியார், சென்னை | 1911 |
| 80. | கம்பராமாயணம்— அயோத்தியா காண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம் | — | சக்தி காரியாலயம், சென்னை | 1958 |
| 81. | அத்யாத்ம ராமாயணம் | எஸ். நடேச சாஸ்திரி தொகுப்பு—ஆர். வேதகிரி தொண்டர் தமிழாக்கம் | எஸ். ஜி. அய்யர் அண்ட் கோ, சென்னை | 1914 |
| 82. | கம்பராமாயண வசனம் | எம். வி. வேணுகோபால் பிள்ளை பதிப்பித்தது | புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை | 1958 |
| 83. | துளசி ராமாயணம் | டி. வேங்கடகிருஷ்ண அய்யங்கார் தமிழாக்கம் | வானதி பதிப்பகம், சென்னை 17 | 1967 |
| 84. | சக்கரவர்த்தி திருமகன் | சி. ராஜகோபாலாச்சாரி | பாரிநிலையம், சென்னை 1 | 1956 |

Edited and published by S. Govindarajulu for the Southern Languages Book Trust, 441, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

# மகாபாரதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மகாபாரதம்—அஸ்வமேத பர்வம் | கே. அருணசல முதலியார் பதிப்பித்தது | — | 1875 |
| 2. | மகாபாரதம்—சாந்தி பர்வம் | பாட்டராச்சாரியார் தமிழாக்கம் | — | 1908 |
| 3. | ஸ்ரீமகாபாரதம்—தமிழ் வசனம்—விராட பர்வம் | கந்தாடை சீனிவாசாச் சாரியார் தமிழாக்கம் | — | 1905 |
| 4. | ஸ்ரீ மகாபாரத வசனம்—ஆதிபர்வ முதல் சொக்கா ரோகரை பர்வம் வரை | கே. வரதராஜமுதலியார், கே. ராமானுஜ நாயுடு | — | 1908 |
| 5. | ஸ்ரீ வேத வியாஸபகவான் அருளிச்செய்த ஸ்ரீ மகா பாரதம்—ஆதிபர்வம் | பி. ஜே. என். சீனிவாச சர்மா தமிழாக்கம் | — | 1911 |
| 6. | பெருந்தேவனுர் பாரதம் என்னும் பாரதவெண்பா | அ. கோபாலய்யர் பதிப்பித்தது | செந்தமிழ் மந்திரம், சென்னை | 1925 |
| 7. | மகாபாரதம் | எம். சுவாமிநாத அய்யர் பதிப்பித்தது | ஆதிகலாநிதி பிரஸ், சென்னை | 1808 |
| 8. | வில்லிப்புத்தூரார் பாரதம் —ஸ்ரீ கிருஷ்ணன் தூது | மூலமும், கே. குமாரசாமி தேசிகர் உரையும் | பி. எஸ். புன்னைவனநாத முதலியார், மதுரை | 1920 |
| 9. | வில்லிபாரத வசனம் | க. அ. ராமசாமி புலவர் வசனமாக்கியது | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1 | 1951 |
| 10. | வில்லிபாரத வசனம் | மோ. வே. கோவிந்தராஜ அய்யங்கார் வசனமாக்கியது | பி. ரத்னநாயகர் சன்ஸ், சென்னை | 1956 |
| 11. | பாரதத்தூதுவர் | கே. லக்ஷ்மணன் | பழனியப்பா பிரதர்ஸ், சென்னை | 1959 |
| 12. | வியாசர் படைத்த பெண் மணிகள் | எம். வி. வெங்கட்ராம் | தமிழ் புத்தகாலயம் சென்னை | 1960 |
| 13. | ஸ்ரீ மகாபாரத வினு விடை | ஏ. எஸ். கஸ்தூரி ரங்கையர் | — | 1909 |
| 14. | ஸ்ரீ மகாபாரத வாக்கியம்—விராட, உத்தியோக பர்வங்கள் | ஆர். எஸ். சுப்புலட்சுமி அம்மாள் | — | 1916 |
| 15. | பஞ்ச பாண்டவர் வனவாசம் | புகழேந்தி | மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை | — |
| 16. | வியாசர் விருந்து | சி. ராஜகோபாலாச்சாரி | தினமணி காரியாலயம், சென்னை | 1956 |
| 17. | வில்லிப்புத்தூரார் மகா பாரதம்—சபா பர்வம் | வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியார் | — | — |
| | விராட பர்வம் | ,, | — | 1940 |
| 18. | வில்லிப்புத்தூரார் பாரதம்—ஆதி பர்வம் | என். எஸ். பொன்னம்பலபிள்ளை உரையுடன் | — | 1934 |
| 19. | வில்லிப்புத்தூரார் பாரதம்—வீட்டும, துரோண, கன்ன பருவங்கள் | வி. எம். சடகோபராமா னுஜாச்சாரிய ஸ்வாமிகள், எஸ். கிருஷ்ணமாச்சாரிய ஸ்வாமிகள் | — | 1938 |
| 20. | மகாபாரதம் பாகம் 1—18 | எம். வி. ராமானுஜாச்சாரி யார், மணலூர் | ஆசிரியரே வெளியிட்டது | 1914-26 |
| 21. | பாரத சாரம் | குப்புசாமி முதலியார் | வி. ஜி. சூரியநாராயண சாஸ்திரி | 1901 |
| 22. | ஸ்ரீமத் பாரத சாரம் | ஏ. வரதாச்சாரியார் | விவேகபோதினி ஆபீஸ், சென்னை | — |
| 23. | ஸ்ரீமத் திராவிட மகாபாரத வசனம் | பி. சண்முக கவிராஜர் | நாராயணசாமி முதலியார், சென்னை | 1890 |
| 24. | ஸ்ரீ மகாபாரத சதகம் | என். கிருஷ்ணமூர்த்தி அய்யர் | தியாகராஜ பிள்ளை, சென்னை | 1931 |
| 25. | மகாபாரதம் | எம். ஏ. ராமானுஜாசாரியார் பதிப்பித்தது | ஸ்ரீ மகாபாரதம் பிரஸ், கும்பகோணம் | 1940 |
| 26. | மகாபாரதம்—வசனம் | டி. சண்முக கவிராயர் தமிழாக்கம் | பி. ரத்னநாயகர் சன்ஸ், சென்னை | 1950 |

REGD. NO. M. 8276



Photo © Magnum-Henri Cartier-Bresson

எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும் அந்தஸ்திலும் உரிமைகளிலும் சமமாகவும் தான் பிறக்கிருர்கள்

—மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 1